GOKULAM

மே 2009 ◆ விலை ரூ.8/- ◆ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



அழ. வள்ளியப்பா
நினைவுச்
சிறுகதைப் போட்டி


"இந்த வருஷம் நாங்கதான்!"

ஹாலிடே ஸ்பெஷல்

கோகுலம் சிறுவர் சங்கம்
உறுப்பினர்கள்


1001


1002


1003


1004


1005



1006



1007


1008


1009


1010



1011


1012


1013


1014


1015



1016



1017


1018


1019


1020


1021


1022


1023


1024


1025

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

கல்கி
நிறைவான வெளியீடு தரம் நிரந்தரம்

மே 2009 மலர் : 27 இதழ் : 4

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்



விடுமுறையைச் சேமிப்போம்!

விடுமுறை என்றால், எந்த வேலையும் செய்யாமல் ஓய்வு எடுப்பது என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். ஆனால், ஒரு வேலையைச் செய்து களைப்பு மேலிடும் போது, அதிலிருந்து மாறி வேறொரு பணியில் ஈடு படுவதுதான் ஓய்வு.

படிப்பது, எழுதுவது, ஓவியம் வரைவது, வீட்டைத் தூய்மை செய்வது, கம்ப்யூட்டர் கற்றுக் கொள்வது.. என்று கற்றுக் கொள்ள, தெரிந்து கொள்ள பல விஷயங்கள் இருக்கின்றன. கையெழுத்து திருந்துவதற்காக சிறப்பு வகுப்புகளைக்கூட இந்த விடுமுறைக் காலத்தில் நடத்துகிறார்கள்.

என்ன காரணம்?

ஓய்வு என்பதைப் பயனற்ற பொழுதாகக் கழித்துவிடக்கூடாது. கிடைக்கக் கூடிய ஒவ்வொரு நிமிட நேரமும் பயனுள்ளது. அதை முறையாகச் சரிவரப் பயன்படுத்திக் கொண்டால், நாம் நம்முடைய கையிருப்பை அதிகப் படுத்திக் கொள்கிறோம் என்பது பொருள்!

எதையெல்லாம் நாம் கற்றுக் கொள்கிறோமோ அவையெல்லாம் நம் மூலதனம். ஏனென்றால், கற்கும் கலைக்கு அழிவில்லை. எந்தக் கலையும் ஏதோ ஒரு விதத்தில் கட்டாயம் பலனைத் தரும். அப்படியொரு சேமிப்பு காலமாக இந்த விடுமுறைக் காலம் உங்கள் அனைவருக்கும் அமையட்டும்!

அன்புடன்
கோகு

அணுகுண்டை

பத்தாம் வகுப்பு. அணுகுண்டு பற்றி கரும்பலகையில் படம் வரைந்து விளக்கிக் கொண்டிருந்தார் சயின்ஸ் டீச்சர். 'ஆக்கபூர்வமான காரியங்களுக்கும் பயன்படும் அணுசக்தி. பேரழிவைத் தரும் மோசமான கண்டுபிடிப்பு. எனவே மனித சமுதாயம் அணுசக்தியை ஆக்கபூர்வமான காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். பேரழிவைத் தரும் அணுகுண்டுகளாக்கினால் லேசில் அழிக்க முடியாது. மோசமான பின் விளைவுகளை அது உருவாக்கும். விளக்கிய டீச்சர் கரும்பலகையில் தீட்டியிருந்த 'அணுகுண்டு' படங்களை டஸ்டரால் அழித்துவிட்டுத் திரும்ப... மஞ்சுளா எழுந்து 'டீச்சர்... அணுகுண்டை லேசில் அழிக்க முடியாது என்று சொன்னீர்கள்... ஆனால் ஒரு சிறு டஸ்டரால் இலகுவாக அழித்து விட்டீர்களே' எனக் கூறினாள். அதைக்கேட்டு அனைவருமே சிரித்து விட்டோம்.

- ஜி.சாயிலட்சுமி, பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா மெட்ரிக் மே.நி. பள்ளி, திருநெல்வேலி



பணம் வாங்கும் இடம்!


ஒரு நாள் பிற்பகல் வேளை.

எங்கள் தமிழாசிரியர் பாடம் நடத்த வந்தார். மதிய உணவு உண்ட மயக்கத்



தில் இருந்த சில மாணவர்கள் டெஸ்கில் தலை வைத்து தூங்கிக் கொண்டிருந்தனர். மாணவர்களை உற்சாகப்படுத்த நினைத்த ஆசிரியர் சொன்னார். "ஒரு நாள் காலை நேரம்! ஒரு பேங்குக்குள்ளே முகமூடி அணிந்த இரண்டு பேர் துப்பாக்கிகளோட நுழைஞ்சாங்க. ஒருத்தன் வாசல் கதவை மூடிட்டு அங்கேயே நின்னுக்கிட்டான். இன்னொருத்தன் கேஷ் கவுண்டருக்குப் போனான். அங்கே கேஷியர் பணத்தை கட்டுக்கட்டா வச்சி

எண்ணிக்கிட்டிருந்தார். அவன் கவுண்டர் துவாரம் வழியா துப்பாக்கியை நீட்டி... 'ஏய்! மரியாதையா எல்லாப் பணத்தையும் எடுத்துக் கொடு'ன்னு சொன்னான். சற்றே தலை நிமிர்ந்த கேஷியர் ஏதோ ஒரு ஞாபகத்தில்... 'மன்னிக்கணும். இது பணம்



அழிக்கலாம்!

செலுத்தற கௌன்டர். பணம் வாங்கற கௌன்டர் பக்கத்திலே இருக்கு'ன்னு சொன்னாரே பார்க்கலாம்.''

சொல்லிவிட்டு ஆசிரியர் நிறுத்த, தூக்கக் கலக்கத்தில் இருந்த மாணவர்கள் உள்பட கலகலவென்று அனைவருமே சிரித்தார்கள். தமிழ் வகுப்பு களைகட்டியது.

- அ.அனீஸ் ஃபாத்திமா,
உ.எண் : 34, பனிரெண்டாம் வகுப்பு, சிசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, போடிநாயக்கனூர், தேனி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

வடிவமைப்பு
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி
044 - 4343 8888
(30 lines)

தொலைநகல்
044 - 4343 8899

மின்னஞ்சல்

tamilgokulam@kalkiweekly.com

marketing@kalkiweekly.com

subscription@kalkiweekly.com

info@kalkiweekly.com

உள்நாடு
ஒரு வருடம் : ரூ. 96/-

ஒரு வருடம் 1000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அணில் பிள்ளை

அங்கே ஓடுது
அணில் பிள்ளை
அதற்குக் கொஞ்சமும்
பொறுப்பில்லை!

இங்கே கனிகள்
மரங் களிலே
இனிப்பாய்க் கனிந்ததை
மறந்ததுவோ!

திங்காதிருந்தால்
ருசியில்லை - அது
தின்பதைப் பார்த்தால்
பசியில்லை!

எங்கே ஓடுது
அணில் பிள்ளை
ஏனோ அதற்குப்
பொறுப்பில்லை!

குண்டு மணிகளோ
அதன் கண்கள்
குஞ்சம் போலவே
அதன் வாலாம்!

கண்டு மகிழ்ந்திட
அணில் பிள்ளை
காணும் சுகமோ
அளவில்லை!

- கவிஞர் வெ. தமிழழகன்,
சேலம்




அக்கா தம்பி ரெண்டு பேரும்
ஆட்டம் ஆடறோம்
கல்லா மண்ணா ஆட்டம்தானே
சேர்ந்து ஆடறோம்!

ஆட்ட முடிவில் கோபம்கொண்டு
'கா' விடுகிறோம்
யாரும் யாரும் பேசாமலே
வீடு நுழைகிறோம்!

எங்க முகத்தைப் பார்த்ததுமே
அப்பா புரிஞ்சுக்கிட்டார்
என்ன ஆச்சு உங்களுக்கு
என்று கேட்கிறார்

'கா' விட்ட கதையைச் சொன்னா
சிரிக்கிறார் அப்பா
காய் கசப்பு பழம் இனிப்பு
அவரே விளக்குறார்.



காயா? பழமா?

காயா பழமா? கேள்வி எல்லாம்
பழைய கதையாச்சு
பழத்தினுடைய இனிப்புதானே
விளையாட்டில் பேச்சு!

- கன்னிக்கோவில் இராஜா,
சென்னை

பாட்டி எங்கள் பாட்டி
பாசமுள்ள பாட்டி
வீட்டில் காலை நீட்டி
பாக்கு போடும் பாட்டி

இரவில் நிலவைக் காட்டி
நிலவில் கிழவி என்பாள்
தினமும் கதைகள் சொல்லி
திகைக்கச் செய்யும் பாட்டி

கைத்தடியைத் தட்டி
நடந்து போகும் பாட்டி
கூனல் முதுகு கொண்டும்
குன்றா நேர்மை காட்டி!

கருணை மிகுந்த பாட்டி
பொறுமை கொண்ட பாட்டி
பல கதைகள் சொல்வாள்
படிப்பினையை ஊட்டி




எங்கள் பாட்டி

பழம் பெருமை பேசும்
பண்பு கொண்ட பாட்டி
பாட்டி குணத்தைப் போற்று
பாசமுள்ளோரைக் கூட்டி.

- வீ.உதயக்குமாரன்,
வீரன்வயல்

மு. வைஷ்ணவி,
உ.எண் : 215, கன்னியாகுமரி.

ஆல்ஃபபெட் அரட்டை!



எப்ப பார்த்தாலும் பல்லை இளிச்சுகிட்டு நிக்காதே? அது நல்லது இல்ல. புரியுதா?



என்ன, இப்படியா வெட்கப்படறது? என்னைப் போல் நிமிர்ந்து நில்லு.



வாலாட்டாதே! கொஞ்சம் அடக்கிவாசி.



எங்கடா போய் காலை ஒடிச்சுக்கிட்டு வந்த? வா டாக்டர் கிட்ட போவோம்.



என்னதான் நீ தலைகீழா நின்னாலும் நான் மசிய மாட்டேன்.

2009

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி



மொத்தப் பரிசுத் தொகை

ரூ.2,000/-

ரூ.1,000/-

ரூ.500/-

ரூ.500/-

(ரூ.250/- வீதம் இருவருக்கு)

சிறுவர் இலக்கியத்துக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது. கலந்து கொண்டு சிறப்பியுங்கள்.

நிபந்தனைகள் :

* இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாக படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.
* கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். உங்கள் சொந்தக் கற்பனைதான் என்ற உறுதிமொழி கடிதத்தைக் கதையுடன் இணைக்க வேண்டும்.
* பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, தபால் தலைகளை இணைக்க வேண்டாம். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
* அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை அளிக்க வேண்டும். கதைகளை முதல்முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. பிறகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்!
* போட்டி முடிவு வெளியாகும்வரை கடிதப் போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. போட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.

முடிவுத் தேதி :
31.7.2009

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கோகுலம்,
அழ. வள்ளியப்பா நினைவுச்
சிறுகதைப் போட்டி - 2009
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

"இவங்க ரெண்டு பேருமே நல்ல ஸ்டூடன்ட்ஸ். தப்பு பண்ணிட்டு, எக்ஸ்க்யூஸ் கேக்கறதுக்காக இந்த ரூமுக்குள்ள வந்ததேயில்லை" என்று தம் பள்ளி மாணவர்களின் புகழ்பாடுகிறார் தலைமை ஆசிரியை. கடந்த ஆண்டு கோகுலம் இதழில் அதிகமான படைப்புகளைஎழுதி முதலிடம் பெற்ற தஞ்சை பொன்னையா ராமஜெயம் பொது மேல்நிலைப் பள்ளி மாணவர்களான த.பிரகல்யா மற்றும் மு.சாய்பிரபுவுக்குத்தான் இந்த பாராட்டுரை!

படக்கதை, ஓவியம், குட்டிக்கதை.... என்று பல் வகையிலும் பங்கேற்ற இந்த இருவரும் படிப்பதிலும் சுட்டியாக இருக்கிறார்கள் என்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

தொடர்ந்து பேசும்போது, "பாடங்களில் தேர்ச்சி பெறுவது எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு மாணவர்களின் பன்முகத் தன்மை வளர்ச்சி பெற வேண்டும் என்பதிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். குறிப்பாக, பல்வேறு போட்டிகளில் மாணவர்களை பங்கேற்கச் செய்கிறோம். அதனால், அவர்களின் ஆளுமைத் திறன் மேம்படுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது" என்றார் அவர்.

"வகுப்பில் மிகவும் கவனமாக இருப்பதிலும், சொல்வதைக் கூர்மையாக புரிந்து கொள்வதிலும் பிரகல்யா ரொம்ப புத்திசாலி. அதேசமயம், மிகவும் பணிவாகவும், அமைதியாகவும் நடந்து கொள்ளும் மிக நல்ல



அட்டை, வண்ணப்படம் : ஸ்ரீஹரி

ராகவன்

பெண். பாடம் படிப்பதோடு பொது அறிவு சம்பந்தமான விஷயங்களிலும் சுட்டிகையான பெண். இப்போது பள்ளியில் நல்ல ஸ்கோர் பெறும் இவளை, வரும் பொதுத் தேர்வில் மாநில அளவில் மதிப்பெண் பெறக்கூடியவளாக எதிர்பார்க்கிறோம்'' என்கிறார் வகுப்பாசிரியை திருமதி சாந்த லட்சுமி.

''நல்லா படிப்பான். ரொம்ப இன்டெலிஜன்ட் பாய். நிறைய டிராயிங்ஸ் போடுவான். பல பத்திரிகைகள்ல இவனுடைய படங்கள் வந்திருக்கு. ரொம்ப பொலைட்டான பையன். ஸாஃப்ட் நேச்சர்'' என்று சாய்பிரபுவைப் பாராட்டுகிறார் வகுப்பாசிரியை திருமதி மீரா. ஆசிரியர்களிடம் பாராட்டுப் பெறுவது சிறப்பான விஷயம். இந்த ஆண்டு கோகுலம் சுழற்கோப்பை அவர்கள் பள்ளிக்குக் கிடைத்தது பற்றிக் கேட்டபோது பிரகல்யா சொன்னதுதான் ஹைலைட்!

''போன வருஷம் நம்பியூர் ஸ்கூலுக்கு சுழற்கோப்பை கிடைச்சதை நான் படிச்சேன். அதனால இந்த வருஷம் எங்க ஸ்கூலுக்குத்தான் கிடைக்கணும்னு முயற்சி செய்தோம். நினைச்சபடியே அது எங்க ஸ்கூலுக்குக் கிடைச்சிருக்கு. அதான் ரொம்ப சந்தோஷம்!''

லட்சியத்தை முன்னிறுத்திய பயணம், வெற்றிகளைச் சந்திக்கிறது என்பது தத்துவம்! அது பிரகல்யாவின் சொற்களாக வேறு வடிவில் வெளிப்படுகிறது. சபாஷ்!





''இந்த வருஷம் நாங்கதான்!''



கிளி ஏன் பச்சையா இருக்குன்னா, அதை யாரும் வறுத்து எடுக்கல.

- இர.அரசுமுத்துக்குமார்,
எட்டாம் வகுப்பு, எஸ்.பி.ஐ.ஓ.ஏ. பள்ளி, திருச்சி





நடக்கறதும், நடக்காததும் நம்ம கையிலே இல்லை. 'கால்'லதான் இருக்கு.

-ஆர்.ஸ்வாதி ப்ரியா, உ. எண் : 591, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம்



படுத்த உடனே தூங்கணும்னா வெறும் பாய் இல்ல; து'பாய்'லதான் தூங்கணும்!

- புதுவை கிருஷ்ணன்

வாந்தியின் காரணம்...

காய்ச்சலைப் போல வாந்தி என்பதும் ஒரு நோயின் அறிகுறியே தவிர, அதுவே ஒரு நோயல்ல. குறிப்பாக, வயிறு சரியில்லை என்று நமக்குத் தெரிவிக்கும் ஓர் எச்சரிக்கை மணியாக இதை எடுத்துக் கொள்ளலாம்.

வாந்தி எப்படி உண்டாகிறது?

நம் உடலில் வாந்தி ஓர் அனிச்சைச் செயல்போல் உண்டாகிறது. மூளையின் பின்பகுதியில் உள்ள 'முகுள'த்தில் (Medulla Oblongata) வாந்தியைத் தூண்டும் மையம் (Vomiting Centre) உள்ளது. இது தூண்டப்படும்போது வாந்தி வருகிறது.

நம் செரிமானப் பாதையில் ஏதாவது ஒரு பிரச்னை ஏற்படும்போது செரிமானச் சுவரில் உள்ள செல்கள் அதை உணர்ந்து கொண்டு, 'வேகஸ்' நரம்பு (Vagus Nerve) வழியாக முகுளத்திற்குத் தகவல் அனுப்பும். வாந்தி எடுத்தால்தான் பிரச்னை சரியாகும் என்று முகுளம் எண்ணினால், அந்தச் செய்தியை வாந்தி மையத்துக்கு அனுப்பிவைக்கும். உடனே அது 'வாந்தி எடு', 'சீக்கிரம் வாந்தி எடு' என்று வயிற்றுக்குக் கட்டளையிடும். இந்தக் கட்டளைகள் பிரெனிக் நரம்பு (Phrenic Nerve), வேகஸ் நரம்பு, தண்டுவட நரம்புகள், பரிவு நரம்புகள் (Sympathetic Nerves) மற்றும் மூளைமைய நரம்புகள் வழியாக வயிற்றுக்கு வந்து சேரும்.

அடுத்த விநாடி இரைப்பைக்கு அருகில் உள்ள சிறுகுடல் தசைகள் மற்றும் சிறுகுடலைச் சுற்றியுள்ள வயிற்றுத் தசைகள் எல்லாமே ஒன்று சேர்ந்து இரைப்பையை அழுத்தும். அப்போது உதரவிதானம் (Diaphragm) சுருங்கிவிடும். இதன் விளைவால் உணவுக் குழாயும் இரைப்பையும் இணைகின்ற இடத்தில் உள்ள 'இரைப்பைக் கதவு' (Cardiac Sphinctre) திறந்து கொள்ள, இரைப்பையில் உள்ள உணவு, நச்சு, அமிலம் எதுவானாலும் 'வாவ்' என்ற பெரிய சத்தத்துடன்



வெளியேற்றப்படும். இதுதான் வாந்தி. பெரும்பாலும் வாந்தி வருவதற்கு முன்னால் வாயில் எச்சில் ஊறுவது, வயிற்றைப் புரட்டுதல், புளித்த ஏப்பம் போன்ற முன்னறிவிப்புகளை வயிறு நமக்குத் தெரிவிக்கும்.

வாந்தி நல்லதா? கெட்டதா?

வயிற்றில் தேவையில்லாத உணவையோ, நச்சுப் பொருளையோ வெளியே தள்ள ஒரு சில முறை வாந்தியெடுப்பது நல்லதுதான். அதற்காக ஒரு நாளில் நான்கு

டாக்டர் கு. கணேசன்

அல்லது ஐந்துமுறை தொடர்ச்சியாக வாந்தியெடுத்தால், உடலில் இருக்கும் தண்ணீர் அளவு குறைந்து, உடல் உலர்ந்து இரத்த அழுத்தம் குறைந்துவிடும். இதனால் தலைச்சுற்றல் மயக்கம் வரும். குறிப்பாக, குழந்தைகள் சில முறை வாந்தி எடுத்தாலே சோர்வடைந்துவிடுவார்கள். இது ஆபத்து.

வாந்தி வர முக்கிய காரணங்கள்

✱ கெட்டுப்போன உணவைச் சாப்பிடுதல், அளவுக்கதிகமாக உணவு சாப்பிடுதல்.

✱ இரைப்பைப் புண், இரைப்பைத் துளை, முன்சிறுகுடல் அடைப்பு, உணவுக் குழாய்ப் புற்றுநோய், இரைப்பைப் புற்று

✱ வயிற்றுப்போக்கு, காலரா, சீதபேதி, குடல்புழுக்கள், குடல்வால் அழற்சி, மஞ்சள் காமாலை, கணைய அழற்சி, பித்தப்பை அழற்சி, பித்தப்பைக் கற்கள், சிறுகுடல் அடைப்பு, சிறுகுடல்துளை, சிறுநீர்ப்பாதை அழற்சி.

✱ வலி நிவாரணி மாத்திரைகள், அழற்சி எதிர்ப்பு மருந்துகள், புற்றுநோய் மருந்துகள், மயக்க மருந்துகள் போன்றவையும் வாந்தியை ஏற்படுத்தும்.

வாந்தி வர மற்ற காரணங்கள்

காதடைப்பு, காது இரைச்சல், காதில் சீழ் போன்ற காதுப் பிரச்னைகளாலும் வாந்தி வரும். காதில் 'வெஸ்டிபுலர் அப்பரட்டஸ்' என்று ஓர் அமைப்பு உள்ளது. இதுதான் நம்மை நடக்க வைக்கிறது. உட்காரவைக்கிறது. உடலை சமநிலைப்படுத்துகிறது. இந்த அமைப்பு தூண்டப்படும்போது வாந்தி வரும். பேருந்தில் பயணம் செய்யும்போது, கடல் பயணம் மற்றும் விமானப் பயணங்களின் போது வாந்தி வருவது இதனால்தான்.

அதீத காய்ச்சல், மூளைக்காய்ச்சல், மூளையில் கட்டி, மூளைநீர் அழுத்தம், தலையில் அடிபடுதல், ஒற்றைத்தலைவலி போன்றவற்றாலும் வாந்தி ஏற்படும். பூச்சிக்கடி, பாம்புக்கடி போன்ற விஷக்கடிகளின்போதும் வாந்தி வரும். ஊசிமருந்து, மாத்திரை போன்றவை ஒத்துக்கொள்ளாவிட்டாலும் வாந்தி வரும்.



வாந்தி வராமல் தடுக்க ஐந்து வழி :

✱ உங்களுக்குப் பிடிக்காத உணவையும் கெட்டுப்போன உணவையும் சாப்பிடாதீர்கள்.

✱ அவசர அவசரமாகச் சாப்பிடாதீர்கள். அளவுக்கு அதிகமாகவும் சாப்பிடாதீர்கள்.

✱ கொழுப்பும் எண்ணெயும் மிகுந்த நொறுக்குத் தீனிகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

✱ வாந்தி எடுத்ததும் சிறிது நேரம் படுத்து ஓய்வெடுங்கள்.

✱ பயணவாந்தி உள்ளவர்கள் பேருந்துப் பயணம் செய்வதற்கு அரை மணி நேரம் முன்பு, வாந்தியைத் தடுக்கும் மாத்திரையை டாக்டர் ஆலோசனைப்படி பயன்படுத்தலாம்.

உளவியல் காரணங்கள் :

சிலருக்குக் கவலை, கலக்கம், பயம், பதற்றம், பரபரப்பு, மன அழுத்தம் போன்ற காரணங்களால் வாந்தி உண்டாகும். இந்த வாந்தி பெரும்பாலும் காலையில் எழுந்த உடன் அல்லது காலை உணவு சாப்பிட்டபின்பு ஏற்படும். பகல்நேரப் பணிகளில் பிரச்னைகளை எதிர்கொள்ள பயப்படும் நபர்களுக்கு இம்மாதிரி வாந்தி வரும். எடுத்துக்காட்டாக, பள்ளிக்குச் செல்ல பயப்படும் குழந்தைகள் காலையில் சாப்பிட்டதும் வாந்தி எடுப்பது இவ் வகையைச் சேர்ந்தது.

சின்னச் சின்ன காரணங்கள் :

பார்வை, நுகர்தல், தொடுதல் போன் றவையும் வாந்தியை வரவழைக்கும். பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் பல்லி விழுந்த பாலைப் பார்த்தால் மாணவர்கள் எல்லோருக்கும் வாந்தி வருவது, துர் நாற்றம் வீசும் இடங்களைக் கடக்கும்போது உண்டாகும் வாந்தி, பல் தேய்க்கும்போது பல்துலக்கி தொண்டையைத் தொட்டுவிட் டால் வாந்தி வருவது போன்றவை இதற்குச் சில எடுத்துக்காட்டுகள்.

சிகிச்சை என்ன?

வாந்தியை நிறுத்துவதற்கும் பல மருந்துகள் உள்ளன. என்றாலும் வாந்திக்கு என்ன காரணம் என்று தெரிந்து, அதற்குரிய சிகிச்சையை செய்தால்தான் வாந்தி சரியாகும். அதற்கு மருத்துவர் உதவியை நாடுவதே நல்லது.

'கோழி முட்டை பச்சை நிறம்' சொன்னா நம்ப முடியலையா? கண்டிப்பாக நம்பித்தான் ஆகணும். கோழி முட்டை வெள்ளை நிறம் என்கிற கொள்கை மாறிப்போயிருக்கு. குரோஷிய நாட்டுக் கோழிப் பண்ணையில்தான் இந்த அதிசயம் நடந்திட்டு இருக்கு. 'ஸ்டிப்பா கிரெகா செவிக்' என்னும் விவசாயி வைத்திருக்கின்ற கோழிப் பண்ணையில் 'ஃபாட்டா' என்னும் அவருடைய செல்ல கோழிதான் பச்சை நிறத்துல முட்டைகளை இட்டு, அனைவரையும் அசத்தி இருக்கு. வாடிக்கையாளர்கள் பச்சை வண்ண முட்டைகளை அதிக விலை கொடுத்து வாங்குவது ஸ்டிப்பாவுக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்காம். 'ஏன்? எப்படி? இந்தப் பச்சை கலர் முட்டை'ன்னு கேள்வி கேட்டா, ஸ்டிப்பா சொல்லுற பதில் என்ன தெரியுமா? அவரு சிவப்பு மிளகைக் கோழிக்கு உணவாகக் கொடுக்கிறாராம். இதுதான் அவர் சொல்லுற பதில். விஞ்ஞானிகள் இந்த பதிலுக்கு நூற்றுக்கு நூறு மதிப்பெண் தருவாங்களான்னு தெரியலை!





தவளைக்கு

தூக்கத்தில் சாப்பிடும் நோய்

தூக்கத்தில் நடக்கும் வியாதியைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். ஆனால், தூக்கத்தில் ஓர் இரவு முழுவதும் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் எப்படி இருக்கும்? இந்த நிலை 45 வயதான கோவாவைச் சேர்ந்த தொழிலதிபருக்கு ஏற்பட்டுவிட்டது. இவர் 100 கிலோ உடல் எடை கொண்ட குண்டு மனிதர். இவர் உறக்கமின்மை நோயால் அவதிப்பட்டார். 'இன்சோம்னியா' எனப்படும் இந்த நோய்க்காகச் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சையின் பத்தாவது நாள் இரவில் காணாமல் போய்விட்டார். தேடிப் பார்த்தபோது, வீட்டிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு ஸ்வீட் கடையின் கதவைத் திறந்து, உள்ளே அமர்ந்து உறங்கிய நிலையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தாராம். மருத்துவ உலகில் இந்த நோயை ஆச்சரியமாகப் பார்த்தனர். கோவா மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் வெளியிட்ட அறிக்கையில், 'உறக்கமின்மைக்காக நோயாளி உட்கொண்ட


முனைவர் ஆசுரா

சால்பிடெம் டார்டரேட் ஏற்படுத்திய விளைவுதான் இந்த உறக்கத்தில் உண்ணும் நோய்' எனத் தெரிவித்துள்ளனர்.

சைக்கிளில் ஒரு வாஷிங் மெஷின்

சீனாவைச் சேர்ந்த ஒரு நடுநிலைப் பள்ளி மாணவன் சைக்கிளில் ஒரு வாஷிங் மெஷினைக் கண்டுபிடித்துள்ளான். இந்த குட்டிப் பையன் என்ன பண்ணினான் தெரியுமா? மார்க்கெட்டுக்குப் போய் ஒரு பழைய வாஷிங் மெஷினை வாங்கி வந்தான். அதைத் தன்னுடைய சைக்கிளின் முன் பகுதியில் பொருத்தி வைத்துக் கொண்டான். சைக்கிள் பெடலோடு வாஷிங் மெஷினின் உட்பகுதியைப் பொருத்தி வைத்தான். குட்டிப் பையன் சைக்கிளை மிதிக்க மிதிக்கத் துணி துவைக்கத் தொடங்கியது வாஷிங் மெஷின். சிறுவனுக்கு உடற்பயிற்சிக்கு உடற்பயிற்சியும் ஆச்சு. துணிகளும் தவைச்சு ஆச்சு. நம்ம அம்மா இந்தச் செய்தியைப் படிச்சா நமக்கும் துணி துவைக்கும் சைக்கிளை வாங்கித் தரப் போறாங்க. எஸ்கேப்!

ஸ்டீல் பிளேட்!





செயற்கைக் கால் பொருத்தப்பட்ட தவளை :

தவளை என்றவுடனே அது குதிப்பது தான் நமக்கு நினைவுக்கு வரும். உலகிலேயே செயற்கைக் கால் பொருத்தப்பட்ட முதல் தவளை எது தெரியுமா? அதன் பெயர் 'புரூலி'. தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த ஆனி மேர்ன்ஸ் என்பவர் தனக்குச் சொந்தமான 'புரூலி' என்னும் தவளை, ஒரு கால் உடைபட்டு வலியால் துடிப்பதைப் பார்க்கப் பொறுக்காமல் அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். மருத்துவர்கள் தவளைக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்து, காலின் உள்ளே சிறிய ஸ்டீல் தண்டை வைத்தனர். தற்போது புரூலி, துள்ளிக் குதிக்கிறது. தவளையின் ஆபரேஷனுக்குப் பின்னால், பில்லைப் பார்த்து ஆனிக்கு மயக்கம் வரவில்லை. ஏன் தெரியுமா? இரண்டு மணி நேர ஆபரேஷனை டாக்டர்கள் இலவசமாகச் செஞ்சிருக்காங்க. கிரேட் டாக்டர்ஸ்!

மலைச் சரிவில் மேய்ந்து கொண்டிருந்தது அந்த ஆட்டு மந்தை. பெரிய ஆடுகளும், சிறிய குட்டிகளுமாக புல்லையும், இலை தழைகளையும் தின்று கொண்டிருந்தன. அதை அங்கிருந்த ஒரு மரத்தில் இருந்தபடியே கவனித்துக் கொண்டிருந்தது ஒரு குருவி!

அப்போது சரேலென்று மேலிருந்து வேகமாய் இறங்கியது பெரிய பருந்து. இறங்கிய வேகத்தில் சிறிய ஆட்டுக்குட்டி ஒன்றை தூக்கிக் கொண்டு பறந்தது. அந்த ஆட்டுக்குட்டி அலறியது. மற்ற ஆடுகள் கத்தின. ஆனாலும் அவற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பருந்து பறந்து போனது.

அதைப் பார்த்த குருவி, பருந்தைப் போல தானும் செய்ய வேண்டும் என்று நினைத்தது. பருந்து, குட்டியைத்தானே தூக்கிச் சென்றது. நான் ஆட்டையே தூக்குவேன் என்று எண்ணமும் ஏற்பட்டது அந்தக் குருவிக்கு.

உடனே மேல்நோக்கிப் பறந்து வேகமாகக் கீழிறங்கியது. பருந்தைப் போலவே இறகுகளை அடிக்காமல், ஒடுக்கிக் கொண்டதால், தடாலென்று ஒரு ஆட்டின் தலையில் வந்து விழுந்தது. விழுந்த வேகத்தில் குருவியின் கால் உடைந்து அலறியது.

அதைப் பார்த்த ஆடு, ''அசட்டுக் குருவியே! ஆசைப்பட்டால் மட்டும் போதாது; அதை அடைய பலமும் வேண்டும். இப்போதாவது புரிந்து கொள்'' என்றது. குருவியும் 'ம்' என்று முனகியது.

- வீரசிகாமணி
ஆதீனமிளகி




தேடி வரும்
கோகுலம்;
படிக்கப் படிக்க
குதூகலம்



தமிழ்நாட்டின் முதலமைச்சராக காமராஜர் விளங்கிய நேரம் அது. ஒருமுறை காமராசர் பள்ளி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ள தாம்பரத்திற்குச் சென்றார். அப்போது தாம்பரத்தில் ஒரு குடிசையில் ஜீவா வாழ்ந்து வந்தார். அவரையும் விழாவிற்கு அழைத்துச் செல்ல விரும்பி, அவரது வீட்டுக்குச் சென்றார் காமராஜர். அப்போது ஜீவா வெற்றுடம்புடன் நின்றார். விழாவுக்கு அழைத்த முதல்வரிடம் 'முதலில் நீங்கள் போங்கள் பின்னாலேயே நான் வந்து விடுகிறேன் என்றார் ஜீவா. 'இல்லையில்லை புறப்படுங்கள். நான் உங்களுக்காக காத்திருக்கிறேன்'' என்றார்

எளிமை



ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் உத்திரப் பிரதேசத்திலுள்ள தாரிகாட் என்னும் இடத்தை அடைய இரயிலில் பயணம் செய்தார். 'கையால் காசைத் தொடுவதில்லை' என்று அப்போது அவர் விரதம் பூண்டிருந்தார். வெய்யில் கொளுத்தியது. சுவாமிஜிக்கு எதிரில் ஒரு பனியா உட்கார்ந்திருந்தான். அவன் சுவாமிஜியைப் பார்த்து ''பாவம் நீ ஏன் இப்படி பசியாலும், தாகத்தாலும் வாடுகிறாய். என்னை போல் நீயும் உழைத்து சாப்பிட வேண்டியதுதானே'' என்றான். ஆனால் சுவாமிஜி பொறுமை காத்தார். அப்போது அந்த ஊர்க்காரன் ஒருவன் கையில் ஒரு மூட்டையுடன், ஒரு கூஜா நிரம்ப நீருடனும் ஓடி வந்தான். சுவாமிஜியின் பக்கத்தில் ஒரு பாய்ய போட்டு, இலையும் விரித்து, பூரியும், இனிப்பு வகையும் பரிமாறினான். ''என்னை யாரோ என்று எண்ணி இருக்கிறாய்'' என்ற சுவாமிஜியயிடம் ''இல்லை சுவாமி, என் கனவில் இராமச்சந்திர மூர்த்தி தோன்றி உங்களை அடையாளம் காட்டி உணவளிக்குமாறு கட்டளை இட்டார்'' என்றான். அதைக் கண்ட பனியா தன் தவறை உணர்ந்து வருந்தினான்.

என்னே கண்ணனின் பெருமை?!


- ம.சௌமியா, ஏழாம் வகுப்பு,
உறுப்பினர் எண் : 405,
மதுரை



பெருமை

காமராஜர். அதைக்கேட்ட ஜீவா சொன்னார் : "நான் வர மிகவும் தாமதமாகும். என்னுடைய சட்டையும், வேட்டியும் கொடியில் காய்ந்து கொண்டிருக்கின்றன. அவை காய்ந்ததும் போட்டுக்கொண்டு வரவேண்டும். அதனால்தான் சொல்கிறேன்" அதைக் கேட்ட காமராசரும், சகாக்களும் அதிர்ந்து போயினர். 'எளிமையாக வாழ்வது' என்பது, சொல்லால் மட்டுமல்ல; நடைமுறையிலும் பின்பற்றப்பட்டது. அதற்கு நல்லதொரு உதாரணமாகத் திகழ்ந்தார் ஜீவா.





கூட்டம்

இங்கிலாந்தின் பிரதமராக விளங்கியவர் வின்ஸ்டன் சர்ச்சில். அவர் மிகச் சிறந்த பேச்சாளர். வின்ஸ்டன் சர்ச்சில் பேச வருகிறாரென்றால் நிறைய கூட்டம் வரும். அத்துணை சிறந்த பேச்சாளர் அவர். ஒருமுறை அவரிடம் ஒரு நண்பர் "நீங்கள் பேசுவதை கேட்க இவ்வளவு கூட்டம் வருகிறதே. உங்களுக்கு வியப்பாக இல்லையா?" என்று கேட்டார்.


அதைக் கேட்ட சர்ச்சில், "என்னைத் தூக்கில் போடப் போவதாகச் சொல்லுங்கள். இதைவிடப் பலமடங்கு கூட்டம் வரும்" என்றார் சலனமே இல்லாமல். அதைக் கேட்ட நண்பர் வாயடைத்துப் போனார்.

- சு.அபிஷேக்,
உறுப்பினர் எண் : 518,
சென்னை

'பஸ்'ஸில் கிடைத்த பர்ஸ்!

ஓவியம் : தர்மா   கதை : ம. சுந்தரலெட்சுமி, உறுப்பினர் எண் : 404, மதுரை.




ஏன்னா, தப்பான ஆசை எல்லாம் இப்படித்தான் ஆரம்பிக்கும்
தாத்தா சொன்னபடியே முகவரியைத் தேடிச் சென்ற ராமன்...
சார், இந்தாங்க உங்க பர்ஸ். பஸ் ஸ்டாப்ல கிடந்தது.
ரொம்ப நன்றி தம்பி. நீ என்ன பண்ணிட்டிருக்க?
வேலை தேடிட்டு இருக்கேன் சார்!
கவலையை விடு. என் ஆஃபீஸ்லயே வேலை தரேன்...
தாத்தாவிடம் சொல்ல, ராமன் சந்தோஷமாக வீட்டுக்குக் கிளம்பினான்.

ஒரு மனிதனை கொத்தும்போது நல்ல பாம்பு 12 மி.கி. விஷத்தையும், விரியன் பாம்பு 15 மி.கி. விஷத்தையும் உடலில் செலுத்துகிறது. பாம்பின் நச்சுப் பையில் எப்போதும் நஞ்சு ஊறிக் கொண்டு இருக்கும்.

- செ.கார்த்திகேயன், உ. எண் : 394, திருச்செங்கோடு

* முதன் முதலில் குதிரையை ஓட்டத் தொடங்கியவர்கள் கிரேக்கர்கள்.








* உலகில் உள்ள அனைத்து பாலூட்டிகளை விடவும் குதிரையின் கண் பெரியது.
* தண்ணீரினுள் முள்ளம்பற்றியை மூழ்கடிக்கவே முடியாது. ஏனென்றால் அதன் முட்களினுள் காற்று நிரம்பியுள்ளது.
* கரப்பான் பூச்சிகள் 3,500 வகைகள் உள்ளன. இவை அனைத்தும் வெப்ப மண்டலக் காடுகளில் காணப்படுகின்றன.
* திமிங்கலத்தின் குட்டி ஒரு வருடத்தில் தாயைப் போல பெரியதாகி விடும்.

- ம.விவேக், திருநெல்வேலி

* அடுக்குமல்லி அதிகாலை 5 மணிக்கு பூக்கும்.
* செம்முல்லை காலை 6 மணிக்கு

நீரில் மூழ்காத

பூக்கும்
* அந்தி மந்தாரை மாலை 4 மணிக்கு பூக்கும்
* பிச்சிப்பூ மாலை 6 மணிக்கு பூக்கும்



* நித்திய மல்லிகை இரவு 7 மணிக்கு பூக்கும்
* பவழ மல்லிகை இரவு 8 மணிக்கு பூக்கும்
* இருவாட்சி நடு நிதி 12 மணிக்கு பூக்கும்

- வே.தனசேகர், உ. எண் : 31, கும்மிடிப்பூண்டி

* நீர்யானை நீரில் 30 நிமிடங்கள் வரை உள்ளிருக்குமாம்.
* கரடி ஒரு மணிக்கு 30 மைல் வேகத்தில் ஓடக் கூடியது.



மிருகம்?

* மரங்கொத்திப் பறவை ஒரு நொடிக்கு 20 முறை கொத்தக் கூடியது.
* பெண்குயின் காற்றில் 6 அடி வரை குதிக்கும்.
* பச்சோந்தியின் நாக்கு அதன் உடம்பை விட பெரியது.


- ஆர்.மோகன், உ. எண் : 436, திருவள்ளூர்

* மனித உறுப்புக்கு மாற்றாக விலங்கின் உறுப்பினை வைக்கும் மருத்துவ முறைக்கு 'ஜெனோ டிரான்ஸ்ப்ளாண்ட்' என்று பெயர்.
* இந்திய அரசியல் சாசனத்தை தேவநாகரி முறையில் எழுதி அதற்கு 'பாரத் கா சம்விதான்' என பெயர் வைத்தவர் வசந்த் வைத்யா!

- ஏ.எஸ்.யோகானந்தம், கோபி



ரூபாய் நோட்டுகளில் கள்ள நோட்டு புழங்குகிறது என்று செய்தித் தாங்களில் அடிக்கடி பார்க்கிறோம். அதனால், நாம் வாங்கும் ரூபாய் கள்ள நோட்டா நல்ல நோட்டா என்று தெரிந்திருப்பது மிக மிக நல்லது.



✱ ரூபாய் நோட்டின் இடது புற வெள்ளை யான பகுதியில் அசோக சின்னம் அல்லது மகாத்மா காந்தியின் உருவப் படம் வாட்டர் மார்க் ஆக இருக்கும்.





கள்ளநோட்டைக் கண்டுபிடி!

✱ ரூ.50, ரூ.100, ரூ.500, ரூ.1000 என்ற என் குறியீடு, RBI சிம்பல் மார்க்காக வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தால் தெரியும்.

✱ வெள்ளிக் கம்பி ரூபாய் நோட்டில் ஊடுருவி நிற்கும்.

✱ வலது மேல் மூலையிலுள்ள மற்றும் இடது மூலையிலுள்ள என் அளவு ஒரே மாதிரியாக இருக்கும்.

✱ பார்வையற்றவர்களுக்கு வசதியாக ரூ.100, ரூ.500, ரூ.1000 நோட்டை எளிதில் கண்டுபிடிக்க, இடது புறத்தில் கறுப்பு நிற முக்கோணம் இருக்கும்.

- ஆர்.ஸ்ரீவித்யா, உ என் 466, ஆறாம் வகுப்பு, ருக்மணி கண்ணன் வித்யாலயா மெட்ரிக், உயர்நிலைப் பள்ளி, கோவை

கோகுலம்

டைஜஸ்ட்



இந்த

டைஜஸ்டில்...


* ஹாரிபாட்டரும், மந்திர உலகமும்
* குட்டிக்கதை
* உருவகக் கதை
* அறிவுரைக்கதை
* படிப்பினைக் கதை
* தேடிப் பாருங்கள்
* டைம்பாஸ்
* புதிர்கள்
* வழிகாட்டுங்கள்
* ரிலாக்ஸ்...

இன்னும்

பல!

உள்ளே...

ஹாரிபாட்டரும் மந்திர



சமீப காலத்தில் கதைப் புத்தகமாகவும், திரைப்படமாகவும் வெளிவந்து பெரும் சாதனை படைத்தது ஹாரிபாட்டர். குழந்தைகளை மட்டுமல்ல; பெரியவர்களையும் ஈர்த்த அந்த கதாபாத்திரம் சாகடிக்கப்படக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்ததெல்லாம் ஹாரிபட்டரின் வெற்றிக்கு சின்ன உதாரணம்! ஹாரிபாட்டரைப் பற்றிய சில சுவையான தகவல்கள் இதோ :

* ஹாரிபாட்டர் கதையை எழுதியவர் ஜே.கே.ரௌலிங். இவர் லண்டனைச் சேர்ந்தவர்.
* ஹாரிபாட்டர் கதை புத்தகமாகவும், படமாகவும் வந்துள்ளது.
* ஏழு பாகங்களைக் கொண்டது ஹாரி பாட்டர் கதை.
* ஒவ்வொரு படத்திலும், ஹாரிபாட்டர் மந்திரப் பள்ளிக்கூடத்துக்கு கிளம்பி, திரும்பி வீட்டுக்கு ரயிலில் வருவதுபோல் அமைந்துள்ளது.
* ஹாரிபாட்டரின் நண்பர்கள் ரான் மற்றும் ஹர்மையனி.
* ஹாரிபாட்டரின் செல்லப்பறவை ஆந்தை.
* ஹாரிபாட்டரின் எதிரி வால்டிமோர்ட்-டின் சின்னம் பாம்பாகும்.
* ஹாரிபாட்டர் கதையின் முக்கியக் கருவே மந்திரத்தை



தவறாகப் பயன்படுத்தும் தீயவர்களுக்கு எதிராகப் போராடி வெல்வதே ஆகும்.

✱ படம் பார்ப்பவர்களை ஒரு புதிய உலகுக்கு அழைத்துச் சென்று விடுகிறது ஹாரிபாட்டர் படம்.

✱ ஹாரிபாட்டர் புத்தகங்கள், ஏழு பாகங்களின் பெயர்கள் :
ஹாரிபாட்டரும் மந்திரக்கல்லும்
ஹாரிபாட்டரும் ரகசிய அறையும்
ஹாரிபாட்டரும் அஸ்கபான் சிறைக் கைதியும்
ஹாரிபாட்டரும் மாய தீக்கோப்பையும்
ஹாரிபாட்டரும் பீனிக்ஸ் கட்டளையும்
ஹாரிபாட்டரும் ஆப் ப்ளட் இளவரசனும்
ஹாரிபாட்டரும் மரணப் பரிசுகளும்

✱ இதுவரை ஹாரிபாட்டர் ஐந்து பாகங்கள் திரைப்படமாக வந்துள்ளது.

✱ ஹாரிபாட்டர் ஆறாவது பாகம் இந்த வருடம் ஜூலை 17-ஆம் நாள் திரைப்படமாக வரவுள்ளது.

- மு.அருண்குமார்,
உ. எண் : 670, பதினொராம் வகுப்பு,
ஆர்.வி.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
ஒசூர்

உலகமும்!







எம்.பழனி,
ஒன்பதாம் வகுப்பு, அரசு
மேல்நிலைப் பள்ளி, ஈரோடு





ர.ஸ்ரீநிதி,
உறுப்பினர் எண் : 42,
ஏழாம் வகுப்பு, த.ஆ.வே.
பெல் பள்ளி,
இராணிப்பேட்டை

எஸ்.ஏ.சைனி,
எட்டாம் வகுப்பு,
எஸ்.பி.கே. மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
திருசெங்கோடு.



எம்.ராம்குமார்,
ஆறாம் வகுப்பு, ஸ்ரீ கண்ணா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, நெல்லை.



பி.கண்மணி,
ஏழாம் வகுப்பு,
கே.ஜி.பி.வி. பள்ளி,
கொங்கணாபுரம்



இ.ரஞ்சித்,
ஏழாம் வகுப்பு, சாரதா
மெட்ரிகுலேஷன்
பள்ளி, செஞ்சி

உங்கள் கைவண்ணம்!



பி.ரவிகுமார்,
ஒன்பதாம் வகுப்பு, காமராஜ்
மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

இளவரசன் முத்தமிழ்!

பச்சை மலை, அமைதியும் வளமும் நிறைந்த நாடு. சுற்றிலும் பெரும் மரங்களைக் கொண்ட காடு, அரணாகச் சூழ்ந்திருந்தது. மன்னர் மார்த்தாண்டரின் ஆட்சி நடைபெற்று வந்தது. மக்களிடம் பேரன்பு கொண்டிருந்த அவரது மைந்தன் இளவரசன் முத்தமிழ். வீரமும் விவேகமும் மிக்கவன்.

ஒருமுறை அவன் வேட்டையாட காட்டுக்குள் சென்றிருந்தான். அந்த நேரத்தில், பக்கத்து நாட்டு மன்னன் வேங்கை மார்பன் தன் படைகளோடு புகுந்தான்.



எதிரபாராத அந்தத் தாக்குதலுக்கு தயாராகும் முன்பு, பச்சை மலை நாடு அடிமைப்பட்டது. மன்னரும், மகாராணி யும்கூட கைது செய்யப்பட்டார்கள்.

எதிர்த்தவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதோடு, வேட்டைக்குச் சென்ற இள வரசனை சிறைப்பிடிக்கவும் வீரர்களை ஏவினான் வேங்கை மார்பன்.

செய்தியை வேட்டைக்குச் சென்ற இளவரசனுக்குத் தெரிவித்தார்கள் ஒற்றர் கள். அதற்குள் எதிரி வீரர்களும் வந்து விடவே, இளவரசன் வேகமாய் ஒரு மரத்தில் ஏறி மறைந்து கொண்டான். அவர்கள் சென்றபிறகு, தன்னுடன் வந்த வீரர்களைத் திரட்டினான்.

''சேதி நாட்டுப் பக்கம் இருந்த காடுகளை அழிக்காமல் இருந்திருந்தால், அவனால் இவ்வளவு தூரம் படை திரட்டி வந்திருக்க முடியாது. நம் நாடும் அடிமைப்பட்டிருக்காது. இப்போதும் கெட்டுவிடவில்லை. நம் வீரர்களை ரகசியமாக ஒன்று சேருங்கள்'' என்று கூறினான்.

அ. வேல்முருகன்,
உறுப்பினர் எண் : 951,
ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்பள்ளி, நம்பியூர்.



வீரர்களும் இளவரசன் கூறியபடியே காட்டினுள் அணிவகுத்தார்கள். அவர் களை அழைத்த இளவரசன், ஒரு பெரும் மரத்தின் வேர்ப்பகுதியை தன்னுடைய வாளால் வெட்டி அகற்றினான். வீரர்கள் ஆச்சரியப்பட்டனர். காரணம், அது செயற்கையாக அமைக்கப்பட்டிருந்த வேர். அதன்கீழ் ரகசிய சுரங்கப்பாதை அமைந் திருந்தது.

''இந்த வழியே நாம் அனைவரும் செல்வோம். இது மன்னரின் பள்ளி யறைக்குச் செல்லும்'' என்றவன் உள்ளே இறங்கினான். வீரர்களும் அவனைத் தொடர்ந்தனர்.

அந்த இரவு வேளையில் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தான் சேதி மன்னன். சுரங்க வழியே வந்த இளவரசன், பள்ளியறைக்குள் நுழைந்து வாள்முனை யில் அவனை எழுப்பினான். விழித்த மன்னன் திடுக்கிட்டான். இளவரசன் சொன்னபடியே செய்தான்.

சிறையில் வைக்கப்பட்ட மன்னரும், மகாராணியும், மற்றவர்களும் விடுவிக் கப்பட்டார்கள். சேதி மன்னனை விடுவித்த முத்தமிழ் சொன்னான் :

''நாடு பிடிப்பதில் உள்ள ஆசையை, உன் நாட்டு மக்களின் நலத்தில் செலுத்து. வீரம் என்பது அடிமைப்படுத்துவதில் இல்லை. அன்பு காட்டுவதில்தான் இருக்கிறது.''

சேதி மன்னன் தலைகுனிந்து வெளி யேறினான். மக்கள் 'இளவரசர் முத்தமிழ் வாழ்க!' என்று வாழ்த்தொலி எழுப் பினார்கள்.

I. இருபத்தொன்பதுல இருபத்தொன்பது போச்சுன்னா விடை என்ன? சைபர்ன்னு சொன்னா அது தப்பு. விடை 9ன்னு சொன்னா சரி. எப்படி?

- டி.எம்.சுரேந்தர், உ. எண் : 35, திண்டுக்கல்

IV. 1. பின் உள்ள நாடு எது?
2. ஐஸ் உள்ள நாடு எது?
3. சிங்கம் உள்ள நாடு எது?
4. மணி உள்ள நாடு எது?
5. தாலி உள்ள நாடு எது?

- வே.தனசேகர், உ. எண் : 31, இரண்டாம் வகுப்பு, கலைமகள் மெட்ரிக் பள்ளி, கும்மிடிப்பூண்டி



V. விடுபட்ட எண்ணையும் எழுத்தையும் கண்டுபிடி!

1	C	5	?
A	3	E	?


- கி.பாலாஜி, உ. எண் : 657, மயிலாடுதுறை

எப்படின்னு

VI. 1) 1, 2, 3, 4, 5, 6, 7, 9 இவற்றை எதனால் பெருக்கினால் விடை 9, 9, 9, 9, 9, 9, 9, 9 என்று வரும்.

II. 1. வேல் உள்ள ஊர் எது?
2. மலை உள்ள ஊர் எது?
3. கடல் உள்ள ஊர் எது?
4. வேலி உள்ள ஊர் எது?
5. கோவில் உள்ள ஊர் எது?

III. 1. பள்ளி உள்ள ஊர் எது?
2. மான் உள்ள ஊர் எது?
3. ஈ உள்ள ஊர் எது?
4. குளம் உள்ள ஊர் எது?
5. கோட்டை உள்ள ஊர் எது?




2) 1, 2, 3, 4, 5, 6, 7, 9 இவற்றை எந்த எண்ணால் பெருக்கினால் விடை 9, 8, 7, 6, 5, 4, 3, 2 என்று வரும்.

3) ஐந்து ஏழுகளைப் பயன்படுத்த வேண்டும். கூட்டி, கழித்து, பெருக்கி,



பாருங்க!



வகுத்து எதுவும் செய்யலாம். விடை 7தான் வரவேண்டும். முயற்சித்துப் பாருங்கள்.

- ரெ.சஹானா, ஏழாம் வகுப்பு, புனித சின்னப்பர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

VII. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 12 கேள்விகளுக்கும் பதில் த, தா, தி, தீ, து, தூ, தெ, தே, தை, தொ, தோ போன்ற உயிர்மெய் எழுத்தில் துவங்கும். கேள்விகளைப் படித்துப் பதில்களைக் கூறுங்கள் பார்க்கலாம்.

1. தமிழகத்தின் மிகப் பெரிய கோவிலான பிரகதீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள இடம்..........................

2. 'பொருநை' நதியின் மறு பெயர் ....

3. உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைமையகம் அமைந்துள்ள ஊர் ....

4. இந்திய சுதந்திரத்துக்காக அரும்பாடுபட்டு உயிர்நீத்த தலைவர்களுள் ஒருவரான தீரன் சின்னமலையின் இயற் பெயர்.....................

5. யானையின் உடம்பில் எலும்பு இல்லாத இடம் ....

6. முத்துநகரம் என்று அழைக்கப்படும் ஊர் ....

7. தியாகராஜர் தனது கீர்த்தனைகளை இயற்றிய மொழி ....


8. பின்புறம் பறக்கும் பறவை ....

9. வைதீஸ்வரன் கோயிலில் உறையும் அம்மனின் பெயர் ....

10. மனித எலும்புகளில் மிகவும் நீளமானது ....

11. நமது உடலை மூடியிருக்கும் மெல்லிய அடுக்கு ....


- ஜெ.சாரதா, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மகளிர் உயர் நிலைப் பள்ளி, கோட்டூர்



கொடுக்கப்பட்டுள்ள புள்ளிகளை இணைத்து மறைந்திருப்பது என்னவென்று கண்டுபிடியுங்கள்.

புள்ளிகளை இணையுங்கள்!

வழி காட்டுங்கள்



ஐஸ்கிரீமை அடைய குட்டிப் பாப்பாவுக்கு வழி காட்டுங்கள்

போகாத வழி!

கதை : பி. தங்கவேல், ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மாணவர் விடுதி
தாரமங்கலம்.
ஓவியம் : பிள்ளை




அருகே வந்ததும்...
என் பெயர் அக்பர் தங்கள் பெயர்..?
நான் மகேஷ் தாஸ்!
அக்பர் தொடர்ந்து...
இந்த வழி ஆக்ராவுக்கு போகுமா?
ஹா.. ஹா...
அக்பர் குழப்பமாய்...
ஏன் சிரிக்கிறாய்?
மன்னியுங்கள். தாங்கள் மன்னர் எனினும் வாய்ப்பில்லை.
என்ன சொல்கிறாய்?
உண்மைதான். இந்த வழி ஆக்ராவுக்கு போய்ச் சேரவே சேராது.
அதிர்ச்சியுடன்...
என்ன சொல்கிறாய்?
நாம்தான் இந்த வழியில் செல்ல வேண்டும்.
பலே மகேஷ்தாஸ்! இனி என்னோடு இரு!
மிக்க நன்றி அரசே!
இந்த மகேஷ்தாஸ்தான் பீர்பால்!



* சந்திரசூடேஸ்வரர் கோயில்

தொழிற்சாலை


'இரண்டாவது ஊட்டி' என்று செல்லமாக அழைக்கப்படும் ஓசூர்தான் எங்கள் ஊர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஓசூர். ஆந்திரபிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களை ஒட்டியுள்ள தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியாக விளங்குகிறது. எனவே இங்கு தமிழ் மட்டும் அல்லாமல், தெலுங்கு, கன்னடம் மற்றும் பிற மொழிகள் பேசும் மக்களும் உள்ளனர்.

இன்று ஓசூர் ஒரு தொழிற்சாலை நகரமாக விளங்குகிறது. விமானங்களுக்குப் பயன்படும் இறக்கைகள், எஞ்சின் பெட்டிகள் மற்றும் அவற்றின் உதிரிபாகங்களும் இங்கு தயாரிக்கப்படுகின்றன. அசோக் லேலண்டு, டைட்டான், டிவி.எஸ். போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களின் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவைகள் அனைத்தும் நகரத்தை விட்டு, ஒதுக்குப்புறமாகவே அமைந்துள்ளதால் ஓசூர் நகரம் இன்றும் இரவு நேரங்களில் சில்லென்றுதான் உள்ளது.



* சுப்பிரமணிய சிவா நினைவுத் தூண்

மேலும் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இளமைக் காலத்தில் படித்த பள்ளி எங்கள் ஊரிலுள்ள பள்ளியாகும். அவரின் நினைவில்லம் ஓசூரிலிருந்து ஆறு கி.மீட்டர் தொலைவிலுள்ள ராஜாஜி அவர்களின் ஊரான தொரப்பள்ளியில் அமைந்துள்ளது. விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவுக்கான நினைவுத்தூண் எங்கள் ஊரின் அருகே அமைந்துள்ளது.



* கிருஷ்ணகிரி அணை

எங்கள் மாவட்டத்தில் உள்ள பாப்பாரப்பட்டியில்தான் பாரதமாதாவுக்கு




* ஹொகனேக்கல்

ஆலயம் அமைக்க திட்டமிட்டிருந்தார் சுப்பிரமணிய சிவா. அவருடைய உள்ளார்ந்த விருப்பத்தை விரைவில் கைகூடச் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் பல அன்பர்கள்.

ஓசூர் நகரத்தின் மற்றொரு சிறப்பம்சம் ஸ்ரீசந்திரசூடேஸ்வரர் மலைக்கோயிலாகும். எந்தத் திக்கில் இருந்து நோக்கினாலும்,

* நிறுவனங்கள்



நகரம்!





* ராஜாஜி படித்த பள்ளி

கோபுர தரிசனத்தைப் பெறக்கூடிய சிறப்புக் கொண்டது. அதற்கு நேர் எதிராக நோக்கினால் திருமாலின் மலைக்கோயிலும் உள்ளது. தவிர, பெங்களூருக்கு அருகில் உள்ள பெரிய நகரமானதால் எலக்ட்ரானிக் தொழிலும் இங்கே முக்கியமானதாக இருக்கிறது. கிருஷ்ணகிரி அணை, ஹொகேனக்கல் நீர்வீழ்ச்சி ஆகியவை எங்கள் ஊருக்கு அருகிலுள்ள முக்கியமான சுற்றுலாத் தலங்களாகும்.

- மு.அருண்குமார், பதினொராம் வகுப்பு, ஆர்.வி. அரசு ஆண்கள் மே.நி. பள்ளி, ஓசூர்

* மேம்பாலம்



தேடிப்

இங்கே தரப்பட்டுள்ள ப
படத்தில் புலி, கத்தி,
நெப்போலியன், டிராகன்
கோட்டை, மலைப்பாம்பு
பெற்றுள்ளன. இவற்றை



ாருங்கள்!

ாதை கவனித்துப்பாருங்கள். இந்தப்
ள், ஈ, கோட், பகடைக்காய்கள்,
மராங், ரம்ப மீன், யானை, எண் 7,
ப்பாக்கி, ரம்பம் போன்றவை இடம்
தமிப்பாருங்கள்!



'பூமி பிழைத்தது!'



அணில் சொன்ன செய்தியைக் கேட்டு மிருகங்கள் கவலையில் உறைந்து போய் நின்றன. "நிஜமாவா?" என்றது மான்.

"ஐயையோ அப்படியா?" என்ற முயல்.

"சே, என்னைவிட தந்திரசாலியா இருக்கிறாங்களே?" வியந்தது நரி.

யானை மீண்டும் அணிலிடம் விசாரித்தது.

"நீ கேள்விப்பட்டதை மறுபடியும் தெளிவாகச் சொல்!"

"இந்த பூமியில் இனி வாழ முடியாது. 'செவ்வாய் கிரகத்தில் எல்லா வசதிகளையும் உருவாக்கிக் கொள்ள முடியும். பூமிக்கு இனி குட்பை சொல்லிட வேண்டியதுதான்'னு மனிதர்கள் பேசிக் கொண்டதை நான் கேட்டேன்" என்றது அணில். அதைக் கேட்டு மிருகங்கள் சோகத்தில் ஆழ்ந்து போயின.

சந்தனக்காட்டில் எல்லா மிருகங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. நகரில் உள்ள விஞ்ஞானிகளின் ஆய்வுக் கூடத்துக்குத் தினமும் சென்று அணில் தகவல்களைத் திரட்டி வரும்.

விஞ்ஞானிகள் கொடுக்கும் பழம், கொட்டைகளைத் தின்று விட்டு அங்கேயே சுற்றி வரும். அப்போது காதில் விழும் செய்திகளை, காட்டுக்கு வந்து மற்ற மிருகங்களிடம் சொல்லும். இதனால் அணில் மீது மற்ற மிருகங்களுக்கு அலாதியான பிரியம்!

சில நாட்களாக அணில் சொன்ன செய்திகள் மற்ற மிருகங்களை கவலையடையச் செய்தது. வேற்று கிரகங்களைப் பற்றிய மனிதர்களின் ஆராய்ச்சி, அங்கே குடியேற அவர்கள் திட்டமிடுவது பற்றி விலங்குகள் பரபரப்பாகப் பேசிக் கொண்டன. இப்போது, ஒரேயடியாக பூமியைவிட்டு மனிதர்கள் செவ்வாயில் குடியேறப் போகிறார்கள் என்று அணில் சொன்னதைக் கேட்டு மிருகங்கள் கவலை கொண்டன.

"எதற்காக இந்த அழகிய பூமியை விட்டுப் போகிறார்கள்?" வினவியது முயல்.

"அதுவா? அவங்க இந்த பூமியை ஏற்கெனவே பாழ்படுத்திட்டாங்க. இயற்கையின் சுழற்சியையும் கெடுத்துட்டாங்க. இதற்கு மேலும் இங்கே இருக்கிறது ஆபத்துன்னு வேற இடத்துக்குப் போறாங்க" என்றது யானை.


"நாமும் அவங்களோடு போக முடியாதா?" கேட்டது மான்.

''ஊஹூம்! அவங்க தங்களை காப் பாத்திக்கத்தான் நினைக்கிறார்களே தவிர, நம்மைப் பற்றி யோசிக்கவே இல்லை'' என்றது அணில்.

''அப்போ, நாம என்ன பண்றது?''

''நம்மையும் அழைத்துச் செல்ல அவங்க தீர்மானம் பண்ணிட்டாங்க!'' என்று அணில் சொன்னவுடன் விலங்குகள் ரொம்பவும் ஆர்வமாயின.

''அப்படியா?'' என்று மயில் கேட்க,


எஸ். முகம்மது ரஜிக்,
உறுப்பினர் எண் : 846,
பரங்கிப்பேட்டை.

என்றது கரடி.

''நாம இங்கேயே அழிய வேண்டி யதுதான்'' என்றது அணில்.

அன்று முழுவதும் எந்த விலங்கும் எதுவுமே சாப்பிடவில்லை. அடுத்த நாளும் அணில் ஆய்வுக் கூடத்துக்கு விரைந்தது. சில தகவல்களுடன் மாலை காட்டுக்கு திரும்பியது.

''உண்மையாகவே நம்மை அழைச்சிட்டு போறாங்களா?'' என்றது ஆமை.

''ஆமாம்! அந்த கிரகத்திலும் நாம அவங்களுக்குத் தேவைன்னு நினைக் கிறாங்க. அதனாலதான்!''

''அட, புரிஞ்சுகிட்டாங்களா?''

''ஆமாம். பொதி சுமக்கவும் பால் கறக்கவும், குழந்தைகளுக்கு விளையாட்டு

காட்டவும்... இப்படி பல விஷயங்களுக்கு அவங்களுக்கு நாம் தேவை. அதனால நம்மையும் அங்கு கொண்டு போறாங்க.

“செவ்வாய்க் கிரகத்துல எல்லா வசதிகளையும் உருவாக்கிக்க முடியும். பூமிக்கு ‘குட் பை’ சொல்லிட வேண்டியதுதான்”



இனி நாம் கவலைப்பட வேண்டாம்'' என்றது அணில்.

இதை கேட்டு எல்லா விலங்குகளும் மகிழ்ந்தன. மறுநாள் முகத்தை தொங்கப் போட்டு கொண்டு வந்தது அணில்.

''என்ன ஆச்சு? ஏன் கவலையா இருக்கே?'' என்றன மற்ற விலங்குகள்.

''அவங்களுக்கு நாம தேவைதான். ஆனால் நம்மை அழைச்சிட்டு போகாமலேயே அந்த தேவைகளை பூர்த்தி செஞ்சிக்குவாங்களாம்!'' என்ற அணில் விளக்கியது.

''தங்களுக்கு தேவையான விலங்குகளை குளோனிங் முறையில் உருவாக்கிக்குவாங்களாம்!''

அதை கேட்டு எல்லா விலங்குகளும் அசந்து போய் நிற்க, மூத்த விலங்கான யானை பேச ஆரம்பித்தது.

''எனக்கென்னவோ இது வருத்தப்படக் கூடிய, விஷயமாத் தெரியலை! நிஜமாக பார்த்தால் நாம் சந்தோஷப்படணும். இதைக் கொண்டாடணும்!''

''என்ன சொல்றீங்க'' கேட்டது நரி.

''இந்த மனுஷங்கதான் பூமியை பாழ்படுத்தியது. அவங்க இங்கேயிருந்து போயிட்டா அப்புறம் இயற்கை தன் இயல்பு நிலைக்கு திரும்பிடும். அதனால அவங்க நம்மையும் தங்களோட கூட்டிப்போக நினைத்தால்தான் நாம கவலைப்படணும்'' என்று யானை நிதானமாகச் சொன்னது.

இதை கேட்டு மற்ற விலங்குகள் மகிழ்ச்சி அடைந்தன.



கற்பனைக்கு வேலை



இங்குள்ள படத்துக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்

வண்ணம் தீட்டுங்கள்



'கோகோ'வின் தாயகம்!

தேசிய நாட்கள்

காந்தி ஜெயந்தி - அக்டோபர் 2
உலக செஞ்சிலுவை தினம் - மே 8
குழந்தைகள் தினம் - நவம்பர் 14
குடியுரிமை தினம் - நவம்பர் 19
காமன்வெல்த் தினம் - மே 24
உழைப்பாளர் தினம் - மே 1
ஆசிரியர் தினம் - செப்டெம்பர் 5
உலக சுகாதார தினம் - ஏப்ரல் 8
தியாகிகள் தினம் - ஜனவரி 30
அறிவியல் தினம் - பிப்ரவரி 28
'க்விட் இந்தியா' தினம்-ஆகஸ்ட் 9


- பா.கணேசன், உ. எண் : 467, எட்டாம் வகுப்பு, முத்தாலம்மன் இந்து உயர்நிலைப் பள்ளி, தேனி

✱ காஷ்மீர் மக்கள் அணிந்திருக்கும் நீளமான தொள தொளப்பான கோட்டுகளின் பெயர் பிரான்.

✱ 'ஸ்பைடர் மேன்' என்ற புகழ் பெற்ற கதாபாத்திரத்தின் இயற்பெயர் பீட்டர் பார்க்கர்.

✱ ஆஸ்டிரிச் போன்ற நடக்கின்ற பறவைகளுக்கு கால்களில் **இரண்டு** விரல்கள் இருக்கும்.

✱ உயிர் வாழ்வின் விதிமுறைகள் குறித்த ஆய்வின் பெயர் Bionomy. உயிரொழுங்கியல்.




✱ இந்திய கால்நடை மருத்துவக் கழகம் ஜட் நகரில் உள்ளது.

- பா.யாழினி, உ. எண் : 808, அருப்புக்கோட்டை

✱ உலகின் முதல் இரயில்





விடப்பட்ட ஆண்டு 27.9.1825

✱ உலகின் மிகப்பெரிய இரயில் நிலையம் கிராண்ட் சென்ட்ரல் டெர்மினல், நியூ யார்க்.

✱ உலகிலேயே அதிக பணியாளர்களைக் கொண்ட பெரிய நிறுவனம் இந்தியன் ரயில்வே.



✱ இந்தியாவின் முதல் இரயில்வே கம்பெனி கிழக்கிந்திய இரயில்வே கம்பெனியும், கிரேட் இண்டியன் பெனிவின் சுலார் இரயில்வே கம்பெனியும்.

✱ இந்தியாவில் முதல் பயணிகள் இரயில் 16.4.1853ல் விடப்பட்டது.

✱ உலகின் முதல் மின்சார இரயில் பாதை 31.5.1879ல் பெர்லினில் அமைக்கப்பட்டது.

✱ உலகில் முதல் நீராவி இஞ்சின் போக்குவரத்துக்காக 3.5.1830ல் இங்கிலாந்தில் விடப்பட்டது.

- எம்.விவேக், திருநெல்வேலி

✱ கர்நாடக மாநிலத்தில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும் இடம் பெங்களூர்.

✱ அமைதிப் பள்ளத்தாக்கு உள்ள மாநிலம் கேரளா.

✱ ஆசியாவிலேயே மிகப் பெரிய கள்ளிச் செடித் தோட்டம் உள்ள இடம் புவனேஸ்வர்.

✱ 'கோகோ' விளையாட்டின் தாயகம் இந்தியா.

✱ குஜராத்தில் அமைந்துள்ள செயற்கைத் துறைமுகத்தின் பெயர் கண்ட்லா.

✱ அகழிகள் அதிகம் உள்ள கடல் பசிபிக் பெருங்கடல்.

✱ பிரெஞ்சுப் புரட்சியின் நினைவாக ஃபிரான்சில் கட்டப்பட்டுள்ள நினைவுச் சின்னம் ஈபிள் டவர்.

- ஆர்.மதுமதி, மதுரை

✱ குளிர்சாதனப் பெட்டியில் குளிர்விக்கும் பொருளாகப் பயன்படும் ரசாயனப் பொருள் திரவ அமோனியா.

✱ பிட்யூட்டரி சுரப்பி மூளையின் அடிப்பகுதியில் உள்ளது.

✱ ஒலிம்பிக் கொடியை வடிவமைத்தவர் டிரவரண்டட்டி போன்.

✱ நவீன ஒலிம்பிக் விளையாட்டுகளின் தந்தை பியரிடி கூபர்டின்.

- பா.கணேசன், எட்டாம் வகுப்பு,
உறுப்பினர் எண் : 467,
முத்தாலம்மன் இந்து உயர்நிலைப்
பள்ளி, தேனி

'அட' மழை!

மழை
பெய்வதை யார்
யார் எப்படி
சொல்வார்கள்?



இரும்பு வியாபாரி : 'கனமா' பெய்யுது..

கரும்பு வியாபாரி : 'சக்கை'ப்போடு போடுது.

சலவைக்காரர் : 'வெளுத்து' கட்டுது.

போலீஸ்காரர் : 'மாமூலா'ப் பெய்யுது.

ஓட்டல்காரர் : 'அடை' மழை பெய்யுது.

அட்டைப் பூச்சி : 'விடாம' பெய்யுது.

ஆமை : 'வெளியே தலை காட்ட' முடியல.

தேள் : 'கொட்டோ கொட்டு'ன்னு கொட்டுது.

நண்டு : 'பிடி பிடி'ன்னு பிடிச்சுருச்சு.

- எஸ்.தணிகைவேல், உ. எண் : 762,
பதினொறாம் வகுப்பு, சி,எஸ்.எம்.
நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்





ஜெ.அகிலா,
உறுப்பினர் எண் : 573,
நான்காம் வகுப்பு,
ஸ்ரீஇராமகிருஷ்ணா
மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப் பள்ளி, கோவை






வி.ஹரிஹரன்,
நான்காம் வகுப்பு, ஸ்ரீ
ரமணா வித்யாலயா,
இராஜபாளையம்

பா.ஐஸ்வர்யா,
கிலேஸ்புருக் மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி, சேலம்

எஸ்.டாலியா டிக்ஸி,
உ. எண் : 24, ஐந்தாம் வகுப்பு, விக்டரி
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மைலோடு



ஏ.கவிப்ரியா,
மூன்றாம் வகுப்பு,
சாரதா
மெட்ரிகுலேஷன்
பள்ளி, செஞ்சி



எஸ்.வர்ஷினி,
யு.கே.ஜி.,



சுட்டீஸ் கைவண்ணம்!

ஆற்றின் பெயர்

அமைதி நிரம்பிய அந்தக் காட்டினுள் வேலனின் கோடரி மரத்தைப் பிளக்கும் சத்தம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. தினமும் காட்டுக்குள் வந்து விறகை வெட்டிக் கொண்டு போய் விற்று, அதில் வரும் காசுதான் அவனுடைய ஜீவனம்.

அந்தக் குறைந்த வருமானத்துக்குள் குடும்பத்தையும் காப்பாற்றி, மற்றவருக்கும் உதவுவான் வேலன்.

அவன் வெட்டிக் கொண்டிருந்த மரம் எதிர்பாராத விதமாய் எதிர்திசையில் சாயமுற்பட்டது. அந்தக் காட்டுப்பாதையின் வழியே ஒரு துறவி வந்து கொண்டிருந்தார். அதைக் கவனித்த வேலன் அலறினான்.

“ஐயா, தள்ளிப் போங்க. மரம் விழுது.” அலறியபடியே அவரை நோக்கி ஓடமுற்பட்டான். அதற்குள் துறவி விலகிவிட்டார். எனினும் மரத்தின் சிறுகிளை தாக்கி வேலனுக்கு ரத்தம் வந்தது.

அவனை எழுப்பிய துறவி, அவனுடைய காயத்தைத் துடைத்து கட்டுப் போட்டார். “உன்னுடைய அன்பு பாராட்டுக்குரியது. இன்னும் முன்னே செல்!” என்றும் சொன்னார்.

வீட்டுக்குத் திரும்பிய பின்பும், துறவியின் வார்த்தைகள் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன. மறு நாள்... துறவியைப் பார்த்த இடத்தையும் கடந்து சென்றான். அங்கே சந்தன மரங்கள் நிறைந்திருந்தன. அவற்றை வெட்டிக் கொண்டு வந்து விற்றான். அவனுடைய குடும்பத்தின் வறுமை நீங்கியது.

சில நாட்களுக்குப் பிறகு, அந்த சந்தன மரக் கூட்டத்தையும் கடந்து சென்றான். ஒரு குகை தென்பட்டது. அதில் வெள்ளிப் பாளங்கள் தென்பட்டன. அவற்றைச் சேகரித்து வந்தான். வசதியும் கூடியது. அவன் செய்யும் உதவிகளும் அதிகப்பட்டன.

மேலும் சில நாட்களுக்குப் பின் அந்த குகையையும் கடந்து சென்றான். அங்கே ஆறு குறுக்கிட்டது. அங்கே பிச்சைக்காரன் ஒருவன் அமர்ந்திருந்தான்.

வேலனைப் பார்த்து, ‘நீ வெள்ளிப் புதையலைப் பார்த்தாயா?’ என்ற பிச்சைக்காரன், அங்கிருந்த பெரிய மரத்தைக் காட்டி, ‘அதன் கீழே தோண்டு. தங்கப் புதையல் இருக்கிறது’ என்றான்.

அவன் சொன்னபடியே, தங்கப் புதையல் கிடைத்தது. ‘இவ்வளவு தங்கம் இருப்பதை அறிந்தும் நீ ஏன் இதை எடுத்துக் கொள்ளவில்லை?’ என்று அவனிடம் கேட்டான் வேலன்.


அதைக் கேட்டவுடன், ‘தம்பி... இந்த ஆறு பேராசை! அதை சொல்லி எச்சரிக்கவும், மீறி விழுந்தால் அனைத்தையும் இழந்துவிடுவார்கள் என்று உணர்த்தவுமே இந்த வடிவத்தில் இருக்கிறேன்?” என்றான் அவன்.

வேலனின் மனம் தெளிந்தது.

‘முன்னே செல்’ என்று துறவி சொன்னது, ‘பொருள் தேடுவதில் மட்டுமல்ல; மற்றவர்களுக்கு உதவுவதிலும், பேராசையற்று இருப்பதிலும்கூட!’ என்று புரிந்து கொண்டான். அந்த தங்கத்தைக் கொண்டு எல்லாருக்கும் உதவினான். ஆனால், அந்த ஆற்றைத் தாண்டவேயில்லை.

பேராசை!

எஸ். ஸ்வேதா,
எட்டாம் வகுப்பு,
வேலுடையார் மேல்நிலைப்பள்ளி,
திருவாரூர்.






வீட்டில் சமையலுக்காக வெங்காயத்தை நறுக்கும்போது, கண்களிலிருந்து கண்ணீர் வருகிறது அது ஏன்? வெங்காயத்தில் 'அல்லைல்' என்ற எண்ணெய் உண்டு. வெங்காயத்தை வெட்டும்போது அந்த எண்ணெய் காற்றில் கரைந்து பரவுகிறது அது கண்களிலும் மூக்கிலும் பட்டு, மெல்லிய நரம்புகளை எரிச்சல் ஊட்டும். உடனே கண்ணும் மூக்கும் மூளைக்கு

வெங்காயமும்

சிலிண்டர் வெடிக்காதது ஏன்?

கேஸ் அடுப்பு எப்படி எரிகிறது என்று கேட்டால், உடனே எரிவாயுவினால் எரிகிறது எனச் சொல்வீர்கள். ஆனால் சிலிண்டரிலிருந்துதான் கேஸ் செல்கிறது. நாம் அடுப்பை பற்ற வைத்தவுடன் அடுப்பு எரிகிறது. ரப்பர் குழாயின் வழியே வரும் நெருப்பு, அடுப்பை எரிய வைக்கிறது. ரப்பர் குழாய் வழியே வெளியே எரிவாயு வரும்போது, நெருப்பும் அதன் வழியே உள்ளே செல்லலாம் அல்லவா? ஆனால், நெருப்பு, ரப்பர் குழாய்வழியாக சிலிண்டருக்குள் சென்று சிலிண்டர் வெடிப்பதில்லையே. ஏன்? எரிபொருள் எரிவதற்கு ஆக்ஸிஜன் துணை தேவை. காஸ் டியூபை விட்டு வெளியே வந்ததும் காற்றுடன் கலந்த பின்னர்தான் எரிகிறது. சிலிண்டரில் இருந்து அடுப்பின் முனைவரை உள்ள பகுதியில் நெருப்பு எரியத் தேவையான அளவு ஆக்ஸிஜன் கிடைக்காது. அதனால் நெருப்பு டியூபினுள் நுழையவோ, சிலிண்டர் வெடிக்கவோ வாய்ப்பில்லை.



- ஆ.பிரேம்குமார்,
உறுப்பினர் எண் : 422,
மூஞ்சிறை

தகவல் கொடுக்கும். மூளை நிவாரணமாக கொஞ்சம் கண்ணீரை திறந்துவிட்டு எரிச்சல் அடைந்த கண்களைக் கழுவும். இதுதான் நாம் வெங்காயத்தை வெட்டும்போது கண்ணீர் வரக் காரணம்.

- செ.கார்த்திகேயன், உறுப்பினர் எண் : 394, ஒன்பதாம் வகுப்பு, புனித அந்தோணியர் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு


கண்ணீரும்!



உப்பும் பனியும் சேர்ந்தால்?

மேல்நாடுகளில் கடுமையான பனிப் பொழிவு ஏற்பட்டு, பாதைகளை அடைப்பதுண்டு. இதனால், போக்குவரத்து தடைபடுகிறது. இதனை சமாளிக்க, பாதைகளில், லாரி, லாரியாக மணலும், உப்பும் கலந்து கொட்டுகிறார்கள். இது ஏன்? பனி, உப்போடு சேர்ந்தால், அது உறைவதில்லை. இதனால், பனி ஐஸ் கட்டிகளாக மாறுவது தடுக்கப்படுகிறது.

- சு.அபிஷேக், உ. எண் : 518, ஆறாம் வகுப்பு, ஈவார்ட்ஸ் உயர்நிலைப் பள்ளி, சென்னை



ஒட்டாத ரசம்!

நீரை கண்ணாடிப் பாத்திரம் அல்லது வேறு எதாவது பாத்திரத்தில் எடுத்தால் நீர் அப்பாத்திரத்தை ஈரமாக்குகிறது. ஆனால் பாதரசம் அப்படி ஈரமாக்கு வதில்லை. ஏன்?


இதற்கு இரண்டு வகையான விசை காரணம். ஓரினக் கவர்ச்சி விசை மற்றும் வேறினக் கவர்ச்சி விசை. நீரின் மூலக் கூறுகளுக்கிடையேயான ஓரினக் கவர்ச்சி விசை, நீர் மற்றும் கண்ணாடியின் மூலக் கூறுகளுக்கிடையேயான வேறினக் கவர்ச்சி விசையைக் காட்டிலும் குறைவு. அதனால் நீர், கண்ணாடியை ஈர மாக்குகிறது.


ஆனால் பாதரசம் கண்ணாடியில் ஒட்டுவதில்லை. ஏனென்றால் பாதரசத்தின் மூலக்கூறுகளுக்கிடையேயான ஓரினக் கவர்ச்சி விசை, பாதரசம் மற்றும் கண் ணாடியின் மூலக்கூறுகளுக்கிடையே யான வேறினக் கவர்ச்சி விசையைவிட அதிகமாகும்.

- சா.ஜோஸ்டின் சாதனா, உ. எண் : 589, பதினொன்றாம் வகுப்பு, கமலாவதி மேல்நிலைப் பள்ளி, ஆறுமுகநேரி.

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.





பாலுவும் சீனுவும்!

இரா.மீ. அருண்சிங்,
பந்தநல்லூர்.

பாலுவும் சீனுவும் வேட்டை நாய்கள். ஒரு ஜமீன்தாரின் வீட்டில் வளர்ந்த இந்த இரண்டு நாய்களும் எப்போதும் சண்டையிட்டுக்கொண்டே இருக்கும். அதனால், அவை இரண்டையும் தனித்தனியே கட்டிப் போட்டிருப்பார்கள்.


ஒருநாள் ...

நாய்கள் இரண்டையும் அவிழ்த்துவிட்டார்கள். அவை இரண்டும் சண்டையிட்டபடியே காட்டினுள் நுழைந்துவிட்டன. அப்போதும் காட்டினுள் நுழைந்துவிட்டோம் என்பதை அவை அறியவே இல்லை.

பாலுவை நோக்கிப் பாய்ந்த சீனுவை திடீரென்று தாவிப் பிடித்தது ஒரு ஓநாய். ஒரு கணம் நடப்பது என்னவென்றே புரியாத சீனு திகைத்தது. அது சுதாரிப் பதற்குள் ஓநாய் சீனு வின் கழுத்தைக் கவ்வ முற் பட்டது. அடுத்த நொடி பெரும் சப்த மெழுப்பியபடி பாய்ந்து வந்தது பாலு. சீனுவைக் கடிக்க முனைந்த ஓநாயின் கால்களை அழுத்தமாகக் கடித்தது.

அதனால் தடுமாறிய ஓநாய் திரும்பிய விநாடியில் சீனு ஓநாயை மறுபுறம் கடித்தது. அதைத் தாங்க முடியாத ஓநாய் ஊளையிட்டபடியே காட்டினுள் ஓட ஆரம்பித்தது. காலில் ரத்தம் வடிய ஓடிய ஓநாயைத் துரத்த முற்பட்டது சீனு. அப்போது, 'வேண்டாம் விடு. நாம் வீட்டுக்குத் திரும்பலாம்!' என்றது பாலு.

சண்டைதான் ஆபத்தை வரவழைத்தது என்பதும், ஒற்றுமைதான் காப்பாற்றியது என்பதும் இரண்டு பேருக்குமே புரிந்தது. எப்போதும் சண்டையிடும் இரு நாய்களும் அமைதியாக வருவதைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார் ஜமீன்தார்.



I. இரு பத்தோன்பது = 2 x 19 = 38
- இருபத்தோன்பது 29
9

வேகமாகக் கேட்கும்போது பெரியவர்களே விடை தெரியாமல் விழிப்பார்கள்.



சரியான்னு பாருங்க!

II. 1.வேலூர், 2.திருவண்ணா'மலை', 3.'கட'லூர், 4.திருநெல்'வேலி', 5.நாகர் 'கோவில்'.

III. 1.திருச்சிராப்'பள்ளி', 2.வலங்கை 'மான்', 3.'ஈ'ரோடு, 4.பெரிய'குளம்', 5.நாட்டரசன் 'கோட்டை'.

IV. 1.'பின்'லாந்து, 2.'ஐஸ்'லாந்து, 3.'சிங்க'ப்பூர், 4.ஜெர்'மணி', 5.இத்'தாலி'.

V. எண்கள் மேலிருந்து கீழாக Alternately 1 3 5 7 எழுத்துக்கள் கீழிருந்து மேலாக Alernately ACE G

G
7

VI. 1) 81, 2) 8, 3) {[(7 x 7) ÷ 7] - 7} + 7 = 7

VII. 1.தஞ்சாவூர், 2.தாமிரபரணி, 3.திருவான்மியூர், 4.தீர்த்தகிரி, 5.தும்பிக்கை, 6.தூத்துக்குடி, 7.தெலுங்கு, 8.தேன்சிட்டு, 9. தையல்நாயகி, 10.தொடை, 11.தோல்

வித்தியாசங்களை கண்டுபிடி!

1. மரத்தின் கிளை, 2.ஜன்னலுக்குள் நாய், 3.போர்டில் எழுத்து, 4.சட்டையில் பட்டன், 5.வீட்டினுள் வெளிச்சம்

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
(டைஜஸ்ட் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

கோகுலம் சிறுவர் சங்கம்

ப ட் டி ய ல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!





டியர் குட்டீஸ்,

பல்வேறு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சிறுவர் சங்கத்தில் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். ஆனால், ஒரே பள்ளியில் இருந்து 46 மாணவச் செல்வங்கள் ஒரே சமயத்தில் உறுப்பினர் சங்கத்தில் சேர கூப்பன் அனுப்பியிருப்பது இப்போதுதான். அந்த வகையில் இந்த மாதம் திருவள்ளூர் மாவட்டம் பஞ்செட்டியில் அமைந்துள்ள வேலம்மாள் பன்னாட்டுப் பள்ளியில் பயிலும் நாற்பத்தாறு மாணவர்கள் உறுப்பினர் பட்டியலில் இடம் பெறுகின்றனர்.

(ஆர்)

1001. ஹேமா, ஐந்தாம் வகுப்பு
1002. வி.அஜய், ஆறாம் வகுப்பு,
1003. அகத்தியன், எட்டாம் வகுப்பு
1004. சாருமதி, ஐந்தாம் வகுப்பு
1005. வெ.ராகுல், எட்டாம் வகுப்பு
1006. சரண், எட்டாம் வகுப்பு
1007. அஷ்மிதா, ஐந்தாம் வகுப்பு
1008. வி.சரவணன், எட்டாம் வகுப்பு
1009. மு.சிவகுமார், எட்டாம் வகுப்பு
1010. பிரியங்கா, ஆறாம் வகுப்பு
1011. பி.நரேஷ்குமரன், ஆறாம் வகுப்பு
1012. இ.சுகன்யா, ஒன்பதாம் வகுப்பு
1013. கு.சஞ்சனா, எட்டாம் வகுப்பு
1014. வி.சரண்ராஜ், ஆறாம் வகுப்பு
1015. சி.தியாகு, ஆறாம் வகுப்பு
1016. பொ.ஜனனி, ஆறாம் வகுப்பு
1017. க.விஜய், ஆறாம் வகுப்பு
1018. த.ராஜேஷ், ஆறாம் வகுப்பு
1019. அ.சண்முகப்ரியா, ஏழாம் வகுப்பு
1020. எம்.கௌதம், ஏழாம் வகுப்பு
1021. ஜெ.சரவணாகுரு, எட்டாம் வகுப்பு
1022. இர.கிரிஸ்ஷான், எட்டாம் வகுப்பு
1023. பா.வெங்கட்ராஜ், ஒன்பதாம் வகுப்பு
1024. ச.தினேஷ், ஒன்பதாம் வகுப்பு
1025. மு.ரா.பாலாஜி, ஒன்பதாம் வகுப்பு
1026. க.தளபதி, ஒன்பதாம் வகுப்பு
1027. பா.ரெ.விஷ்ணுவர்தன், ஒன்பதாம் வகுப்பு
1028. ஜா.தினேஷ்குமார், ஒன்பதாம் வகுப்பு
1029. இ.கார்த்திகேயன், ஏழாம் வகுப்பு
1030. ம.ஜெயவேலன், ஏழாம் வகுப்பு
1031. இராஜேஸ்வர பிரபு, ஒன்பதாம் வகுப்பு
1032. து.க.பிரவீன், ஒன்பதாம் வகுப்பு
1033. சி.சிவப்ரியா, ஏழாம் வகுப்பு
1034. ஜே.ர.ஆசிக், ஏழாம் வகுப்பு
1035. வெ.பிரசாந்த கண்ணன், எட்டாம் வகுப்பு
1036. சு.சிராக் பரடியா, ஏழாம் வகுப்பு
1037. மு.நிருஷா, எட்டாம் வகுப்பு
1038. தாரணி, ஐந்தாம் வகுப்பு
1039. ஆர்.ஆனந்த், ஆறாம் வகுப்பு
1040. ஆகேஷ் ஜான், ஏழாம் வகுப்பு

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!



1041. எம்.அப்துல் ஹமீது, ஏழாம் வகுப்பு
1042. கா.மகேஷ், எட்டாம் வகுப்பு
1043. புவனேஷ், எட்டாம் வகுப்பு
1044. ப.பாலாஜி, ஒன்பதாம் வகுப்பு
1045. ஆசப் தாஹிர், ஏழாம் வகுப்பு
1046. கு.கௌசிக், ஏழாம் வகுப்பு
1047. சி.சீ.பாக்யா, ஒன்பதாம் வகுப்பு, சி.நா.கு.பெ. மேல்நிலைப் பள்ளி, திருத்தஸ்கல்
1048. ஜி.கீர்த்திகா, ஒன்பதாம் வகுப்பு, அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, பேரளம்
1049. வே.பரணி சங்கர், 3ஆம் வகுப்பு, தி நியூ லைட் மெட்ரிக் பள்ளி, திருவிடைமருதூர்
1050. எம்.பழனி, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, வெள்ளோடு.

'ஜம்பிங்' சாம்பியன்!

ஜேம்ஸ் குக் என்பவர் 1770-ல் ஆஸ்தி ரேலியாவின் 'குக் டவுன்' அருகே ஒரு விநோதமான விலங்கைக் கண்டார். அப் பகுதி மக்களிடம் 'இது என்ன விலங்கு?' என ஆங்கிலத்தில் வினவினார். அவர்கள் 'ககாரு' என்றனர். அவர்கள் பேசும் 'குகு யிமிதிரி' மொழியில் அதற்கு, 'புரியவில்லை' என்று அர்த்தம்.

ஜேம்ஸ் குக் அதையே விலங்கின் பெய ராக எண்ணி அழைக்கத் தொடங்கினார். 'கங்காரு' என்ற பெயர் வந்த கதை இதுதான்.

ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்கான கங்காரு, மிகவும் வித்தியாசமான தோற்றம் கொண்டது. ஒரு கங்காரு நிமிர்ந்து நின்றால் அதன் உயரம் ஆறு அடி வரை இருக்கும்.



அதன் முன் கால்கள் சிறியதாகவும், பின் கால்கள் மிக நீண்ட தாகவும் இருக்கும். இதன் கால்கள் மிக வலிமையானவை. இது ஒரு முறை தாண்டினால், 3 முதல் 5 மீட்டர் நீள தூரத்தைக் கடந்துவிடும். இதன் வால் நீளமானது.


காடுகளில் கங்காருவை வேட்டை நாய் கள் துரத்துவதுண்டு. இதுபோன்ற நேரங் களில் கங்காரு 22 அடி முதல் 30 அடி வரையில் தாவிக் குதித்து ஓடும். வேட்டை நாய்கள் சூழ்ந்து கொண்டால் ஏதாவது ஒரு நாயை முன் காலைப் பயன்படுத்தி இழுத்து பின் காலினால் ஒரு சுற்றிச் சுற்றி அடித்துக் கொன்றுவிடும்.

பெண் கங்காருவுக்கு வயிற்றில் பை உண்டு. குட்டிகள் வளரும் வரை இந்தப் பை தான் குட்டிகளின் தொட்டில்.

'ஜம்பிங்' சாம்பியனான கங்காருவின் வாழ்நாள் ஆறு முதல் எட்டு ஆண்டுகள். கண்முன் ஒரு குச்சி கிடந்தாலும், இவற்றால் அதைப் பார்க்க முடியாது. அதே சமயம் கங்காருவுக்கு மோப்ப சக்தியும், கேட்கும் தன்மையும் மிகவும் அதிகம்.



- சு.அபிஷேக்,
உ. எண் 518,
சென்னை



* நியூசிலாந்தின் தேசியப் பறவை கிவி.
* இது பகலில் தூங்கி இரவில் இரை தேடும்.
* கிவிகளில் ஆணினமே அடை காக்கும்.
* கிவியின் முட்டை அதன் எடையில் கால்பங்கு அளவு இருக்கும்.
* தரையைத் தோண்டித் பார்க்காம லேயே முகரும் சக்தியால் புழுக்களை உணர்ந்து கொள்ளும் தன்மை கிவிக்கு உண்டு.

- பா.கணேசன், உ. எண் : 467, வடபுதுப்பட்டி

ஒரு ஜோடி எலி ஓராண்டுக்கு 520 எலிகளாகப் பெருகும். ஒரு தாய் எலி ஒரு தடவைக்கு 5 முதல் 10 குட்டிகள் வரை போடும். தாய் எலி 18 மாதங்கள் வரை குட்டி போட்டுக் கொண்டே இருக்கும். ஒரு எலி ஒரு மாதத்துக்கு 6 கிலோ உணவு தானியங்களை தின்று தீர்த்துவிடும். ஒரு எலி, தான் தின்பதை விட 10 பங்கு தானியத்தை வீணாக்கி சேதப்படுத்தும். 6 எலிகள் சேர்ந்து தின்றால் ஒரு மனிதன் சாப்பிட வேண்டிய உணவை சாப்பிட்டு விடும்.

- தேனி முருகேசன், தேனி

உலகிலுள்ள கத்தோலிக்க மக்களின் தலைமையகமாக கருதப்படும் வாடிகன்



உண்பது கொஞ்சம்;

நாடுதான் உலகின் மிகச் சிறிய நாடாகும். இது 1929ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் தேதி இத்தாலிய பிரதமர் பெனிட்டோ முஸ்ஸோலினியும், அப்போதைய திருடே செயலர் கர்தினால் பியத்ரோ கஸ்ப்பாதியும் கையெழுத்திட்டதன் மூலம் தனி நாடாக அங்கிகரிக்கப்பட்டது. இப்போது அந்நாட்டின் வயது எண்பது ஆகும்.


- த.பரதன், திருவாரூர்

ஆப்பிரிக்க வெப்பமண்டல புல்வெளிகளில் காணப்படும் வரிக்குதிரைகள் அனைத்துமே பார்ப்பதற்கு நமக்கு ஒன்று போல இருக்கும். ஆனால், அது உண்மையல்ல; ஒவ்வொரு வரிக்குதிரையும் வெவ்வேறு இணை வரிக்கோடுகளைப் பெற்றிருக்கும். இக்கோடுகள் நம்முடைய கைரேகைகளுக்குச் சமமானவை. இந்த வரிகள் உயரமான புல்வெளிகளில் வரிக்குதிரை மறைந்து கொள்ள உதவுகின்றன.

- ஆர்.மோகன்,
உறுப்பினர் எண் : 536, திருவள்ளூர்

வான்கோழி பிறந்த இடம் அமெரிக்கா. இது பதினாறாம் நூற்றாண்டில் ஸ்பெயினுக்கு கொண்டு வரப்பட்டது. பிறகு கனடாவுக்குப் பரவி, அதன்பின் ஐரோப்பிய நாடுகள் வழியாக உலகம் முழுவதும் பரவியது.

இதை 'சீமைக் கோழி' என்றும், ஆங்கிலத்தில் 'டர்க்கி' என்றும் அழைப்பர். பொதுவாக வான்கோழி 23 கிலோ எடை கொண்டதாக இருக்கும். கழுத்துப் பகுதியில் தொங்கும் பை போன்ற அமைப்பு



சிவப்பு, நீலம், வெள்ளை என அவற்றின் மனநிலைக்கு ஏற்ப மாறும். ஆண் பறவையின் வால் விசிறி போன்று அழகாக சுருங்கி விரியும் தன்மை உடையது.

பெண் கோழி சாம்பல் கலந்த வெளிர் பச்சை நிறத்தில் இருக்கும். ஒரு சமயத்தில் 20 முதல் 30 முட்டைகள் இட்டு அடை காக்கும்.

- எஸ்.சுப்ரியா, உ. எண் : 79,
சென்னை





நிரம்பாத

I. 1. பள்ளிக்குச் செல்வான்; பாடம் படிக்க மாட்டான் - அவன் யார்?

2. தலையில் மோதி மோதிப் பல்லை உடைத்தான் - அவன் யார்?

3. பார்க்கும்போது கறுப்பு; பாடும்போது இனிப்பு - அது என்ன?

4. அருகருகே இருந்தாலும் ஆயுள் வரை சேர்வதில்லை - அது என்ன?

5. ஆலமரம், தூங்க, அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க, திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை - அது என்ன?

6. காட்டிலே பெண் பிறந்து கன்னியர் கையாலே குத்துப்பட்டது - அது என்ன?

- **ஆர்.மதுமதி, மதுரை**



II. 1. ஒகோ தடியா உயர்ந்த தயாளா! உடம்பைச் சுற்றி ஏன் நூறு தழும்பு! - அது என்ன?

2. ஒரு கரண்டி மாவு; ஊரெல்லாம் தோசை - அது என்ன?

3. ஓயாது இரையும் இயந்திரம் அல்ல; உருண்டோடி வரும் பந்தும் அல்ல - அது என்ன?

4. ஓடும் சங்கிலி, உருளும் சங்கிலி; பள்ளம் பார்த்தால் பாய்ந்தோடும் சங்கிலி - எது என்ன?

5. ஆற்றில் அலையுது தம்பி; அழுக்கெல்லாம் விழுங்குது தம்பி - அது என்ன?

6 மரக்கிளையைச் சுமந்தபடி மனம் போலப் பயணம் - அது என்ன?



7. வாயில்லாப் பிள்ளை; ஊர் ஊராய் பறக்குது - அது என்ன?

- ஆர்.சர்வேஸ்வரன், உ. எண் : 456, மதுரை

III. 1.மடக்காத இறக்கையோடு பளக்கும் பறவை; மரக்கிளையில் அமராத

வயிறு!

மாயப் பறவை-அது என்ன?

2. உயிரில்லாப் பாம்பு - அது என்ன?

- ஒய்.ரவிராகுல், ஈரோடு

IV.1. கிணறு நிறைய தண்ணீர் இருக்கு, ஆனால் குருவி குடிக்க வழியில்லை - அது என்ன?

2. நெடுக வளர்ந்தவனுக்கு நிழல் இல்லை - அவன் யார்?

3. பல பேருக்கு, ஒரே குடுமி, அது யார்?

4. எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் இவன் வயிறு நிரம்பாது - அவன் யார்?

- ந.பிருந்தா, ஆறாம் வகுப்பு, ராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

V.1. நீர் ததும்பி நிறைந்திருக்கும், குளமும் அன்று, மூன்று கண்ணிருக்கும், சிவனும் அன்று - அது என்ன?

2. நோயில்லை; நொடியில்லை; நாளும் மெலிகிறான் - அவன் யார்?

3. நான்கு எழுத்து ஊர், முதல் எழுத்து நீரில் உண்டு, சீரில் இல்லை, இரண்டாம் எழுத்து கலத்தில் உண்டு, களத்தில் இல்லை, மூன்றாம் எழுத்து கிளியில் உண்டு, புளியில் இல்லை, நான்காம் எழுத்து பொரியில் உண்டு, பொறியில் இல்லை, அது எந்த ஊர்?

- ஆர்.நித்யஸ்ரீ, உ. எண் : 852, நான்காம் வகுப்பு, டி.வி.எஸ். ஆரம்பப் பள்ளி, மதுரை

விடைகள்

I. 1.பள்ளிப் பேருந்து, 2.சீப்பு, 3.குயில், 4.இரயில் தண்டவாளங்கள், 5.மூச்சு, 6.பேன்

II. 1.தென்னைமரம், 2.நிலவு, 3.கடல் அலை, 4.தண்ணீர், 5.மீன், 6.மான், 7.ஏரோப்பிளேன்

III. 1.விமானம், 2.ரயில் வண்டி

IV. 1.இளநீர், 2.தார் ரோடு, 3.பூண்டு, 4.கடல்

V. 1.தேங்காய், 2.தேய்பிறைச் சந்திரன், 3.நீலகிரி











போட்டி நிச்சயம்! முயன்றால் பேட்டி நிச்சயம்! - ஆரணி பழனி, ஸ்ரீஐஸ்வர்யா பப்ளிகேஷன், 40/16, பெருமாள் தெரு, ஆரணிப் பாளையம், ஆரணி - 632 301. விலை ரூ.25.00

நாம் குறைவறக் கற்றுள்ளோமா என்பதை வெளிப்படுத்துபவை தேர்வுகள். அதற்கு அன்றாடம் நாம் செய்ய வேண்டுவன என்ன, செய்ய வேண்டாதன என்ன என்பதை சில கட்டுரைகள் வாயிலாக வெளிப்படுத்துகிறது இந்நூல்.

நன்னெறிக் கதைகள் 61, பேராசிரியர் எ.சோதி, நன்மொழிப் பதிப்பகம், 16, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 605 003. விலை ரூ.30.00

பண்புகளை வளர்க்கவும், அறிவை மேம்படுத்திக் கொள்ளவும் உதவும் கருத்துக்களைத் தருகின்ற அறுபத்தொரு குட்டிக் கதைகளின் தொகுப்பு. ஓய்வு நேரத்தையும் விடுமுறையையும் பயனுள்ளதாக்க இந்த நூல் உதவும்.

செவ்வாய் கிரகம், என்.ராமதுரை, Prodigy 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018. விலை ரூ.25.00



சூரியக் குடும்பத்தில் பூமிக்கு அடுத்த வீடு செவ்வாய். இந்நூல் செவ்வாய் கிரகம் குறித்த தகவல்களையும், அங்கு அனுப்பப்பட்ட விண்கலங்கள், செவ்வாய் கிரகம் பற்றிய ஆய்வுகள் போன்ற தகவல்களையும் எளிய கட்டுரைகளாகத் தந்துள்ளது.

மாணவருள் மாணிக்கம் - பாரதிவாணர் சிவா, முத்துப் பதிப்பகம், 27, வில்லியம் லே-அவுட், 2-ஆவது தெரு, விழுப்புரம். விலை ரூ.70.00

மாணவப் பருவத்திலேயே நற்குணம் கொண்ட சிறுவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதை அடிப்படையாகக் கொண்ட படக்கதை. சிறந்த, சீரிய முயற்சி!

பூமிக்கு பக்கத்து வீடு!

- நேயமுகில்

போருக்குப் பின்னால் அமைதி!

கௌதம்ராம்

இன்று உலகம் முழுவதும் பெரிதும் மதிக்கப்படும் முக்கிய அமைப்பு ஐக்கிய நாடுகள் சபை.

முதல் உலகப் போர் நடந்தபோது, அதன் கடுமையான விளைவுகளைப் பார்த்து உலக நாடுகள் மத்தியில் அமைதி நிலவச் செய்ய ஒரு அகில உலக அமைப்பு அவசியம் என்று உணரப்பட்டது. அதன்படி ஏற்படுத்தப்பட்டதுதான் "லீக் ஆஃப் நேஷன்ஸ்" என்ற உலக நாடுகளின் கூட்டமைப்பு. என்றாலும், அதன் செயல்பாடுகள் அந்த நோக்கத்தை நிறைவேற்றவில்லை. இரண்டாம் உலகப் போர் மூண்டது. பல்வேறு நாடுகளை சேர்ந்த லட்சக் கணக்கான ராணுவ வீரர்களும், பொது மக்களும் போரில் பலியாயினர். ஏராளமான சொத்துக்கள் நாசமாயின. ஜப்பான்மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது இரண்டாம் உலகப் போரின் கொடூரத்தின் உச்சக்கட்டம்.

* ஹென்றி டூனான்ட்



எனவே, உலக அமைதியை வலியுறுத்தியும், நாடுகளுக்கிடையில் கூட்டுறவும், ஒற்றுமையும் நிலவவும் 1945ஆம் ஆண்டு தோன்றியதுதான் ஐ.நா. சபை. இன்று உலகின் பலம் வாய்ந்த, சாதாரணமான, பணக்கார, ஏழை நாடுகள் என்று மொத்தம் 172 நாடுகள் ஐ.நா. சபையில் உறுப்பினர்களாக இருக்கின்றன. ஐ.நா. பொதுப்பேரவை, பாதுகாப்பு கவுன்சில், பொருளாதார மற்றும் சமூக கவுன்சில், ஐ.நா. தலைமை செயலகம், அகில உலக நீதிமன்றம் என்று பல்வேறு அங்கங்களுடன் இது சீரிய முறையில் பணியாற்றி வருகிறது.

1859ஆம் ஆண்டு, இத்தாலி நாட்டில் ஆஸ்திரியப் படைகளுக்கும், பிரெஞ்சுப் படைகளுக்கும் இடையில் நடைபெற்ற கடும் போரில் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை



* ஐ.நா. சபை

நாற்பதாயிரத்துக்கும் அதிகம். கடுமையான தாக்குதலுக்குள்ளான ராணுவ வீரர்களும், பொதுமக்களும் உடனடி மருத்துவ சிகிச்சை கிடைக்காத காரணத்தால் மரண மடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்தக் கொடுமை ஸ்விட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்ரி துனாண்ட் என்ற இளைஞனை உலுக்கியது.

உடனடியாக உள்ளூர் மக்களைத் திரட்டி, காயமடைந்த ராணுவ வீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் மருத்துவ உதவியும், உணவும் அளிக்க ஏற்பாடு செய்தார். மருத்துவ சிகிச்சை அளிக்கவும், சேவை செய்யவும் அவர் துவக்கி வைத்த அமைப்புதான், பின்னாளில் செஞ்சிலுவைச் சங்கம் என்று உருவாகக் காரணமாக அமைந்தது. நாடு, மதம், இனம் என்று பார்க்காமல் போர் முனையில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மருத்துவ மற்றும் இதர உதவிகளை அளிப்பதுதான் செஞ்சிலுவைச் சங்கம். இது சுதந்திரமான அமைப்பாகும். இஸ்லாமிய நாடுகளில் சிலுவைக்கு பதிலாக பிறைநிலவைக் குறிக்கும் வகையில் இந்த அமைப்பு 'ரெட் கிரஸன்ட் சொசைட்டி' என்று குறிப்பிடப் படுகிறது. 1901ல் உலகின் முதல் நோபெல் சமாதானப் பரிசினைப் பெற்ற செஞ்சிலுவைச் சங்கம் இதுவரை நான்கு முறை நோபெல் அமைதிப் பரிசினைப் பெற்றுள்ளது.



● உலகம் முழுவதும் சிறைகளில் இருக்கும் கைதிகள் சித்ரவதைக்குள்ளாகிறார்கள். தங்கள் வசிப்பிடங்களிலிருந்து போர், வறுமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காகவும் மக்கள் அகதிகளாக வெளியேறுகிறார்கள். அவர்களுக்கு அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பெண்கள், குழந்தைகளின் உரிமைகளுக்கு தக்க பாதுகாப்பு கிடையாது. மக்கள் நலனுக்காக அரசாங்கங்களுக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள் அரசியல் ரீதியான காரணங்களுக்காக தண்டிக்கப்படுகிறார்கள். இதுபோன்ற மனித உரிமை மீறல்களை எதிர்த்துப் போராடி, உரிமைகளை நிலைநாட்ட பாடுபட்டு வரும் அமைப்புதான் அம்னெஸ்டி இன்டெர்நேஷனல். இது 1961ல் பிரிட்டனில் துவக்கப்பட்டது.

அம்னெஸ்டி இன்டெர்நேஷனல் அமைப்பில் இன்று உலகின் 150 நாடுகளைச் சேர்ந்த 22 லட்சம்பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடக்கும் மனித உரிமை மீறல்களை எதிர்த்து குரல் கொடுக்கிறார்கள்; கையெழுத்து இயக்கம்,

போராட்டங்கள் நடத்துகிறார்கள்.

● இரண்டாம் உலகப்போரின் காரணமாக லட்சக்கணக்கான குடும்பங்கள் வீடுகளை இழந்தன. இரண்டு கோடி குழந்தைகள் போதிய சத்துணவின்றி வாடினார்கள். கடுமையான நோய்த் தாக்குதலுக்குள்ளாகி, உடல் நல பாதிப்புக்குள்ளானார்கள். அத்தகைய குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஐ.நா. சபையால் உருவாக்கப்பட்ட குழந்தைகள் நல அமைப்புதான் யுனிசெப். அதாவது ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதி. 1946ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி யுனிசெஃப் உருவானது. குழந்தைகள் கல்வி, நோய்த் தடுப்பு, சத்துணவுக் குறைபாடு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துப் பணியாற்றுகிறது யுனிசெஃப். இதன் தலைமையகம் நியூயார்க் நகரில் உள்ளது.

● சர் ஜூலியன் ஹெக்ஸ்லே என்பவர் புகழ் பெற்ற பிரிட்டிஷ் உயிரியல் விஞ்ஞானி. அவர் ஆப்பிரிக்க நாடுகளுக்கு 1960ல் ஒரு ஆராய்ச்சிப் பயணம் மேற்கொண்டார். ஆப்பிரிக்க நாடுகளின் காடுகளில் வசிக்கும் பல விதமான அரிய விலங்கினங்களும், பறவையினங்களும் சர்வ சகஜமாக வேட்டையாடப்படுவதையும் மரங்களும் இதர இயற்கை படைப்புகளும் அழிக்கப்படுவதையும் கண்டு அதிர்ந்தார். இதனைத் தடுக்காமல் போனால், முற்றிலுமாக அழிந்துவிடும் என அஞ்சினார். தனது அச்சத்தை சக விஞ்ஞானிகள் மற்றும் முக்கிய நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டார். அதன் விளைவாக உலக வனவிலங்கு நிதி உருவானது. கடந்த 40 ஆண்டுகளில் இந்த அமைப்பு நன்கு வளர்ச்சியுற்று, 100 நாடுகளில் செயல்பட்டு வருகிறது. 1986ல், இந்த அமைப்பின் பெயர் இயற்கைக்கான உலகளாவிய நிதி என்று மாறியது. இந்த அமைப்பின் சின்னம் பாண்டா கரடிக் குட்டி.

● அகில உலக அளவில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபட்டு வரும் அமைப்பு பசுமை அமைதி. 1971ல் கனடா நாட்டின் வான்கூவர் நகரத்தில் இந்த அமைப்பு துவக்கப்பட்டது.

* ஹெக்ஸ்லே



அமெரிக்கா அலூசியன் தீவினை அணு ஆயுத பரிசோதனை ஸ்தலமாகப் பயன்படுத்தியதை எதிர்த்து, இந்த அமைப்பு துவக்கப்பட்டது. தொடர்ந்த போராட்டத்தின் பலனாக, அதில் வெற்றி கண்டது. அதனைத் தொடர்ந்து சுற்றுச் சூழல் பிரச்னைகளுக்காக போராடும் அமைப்பாக மாறியது. கடலில் ரசாயனக் கழிவுகளைக் கொட்டுவதைத் தடுப்பது, ஓசோன் மண்டலத்தைப் பாதுகாப்பது, இயற்கைக்குத் தீங்கு இழைக்கும் ரசாயனப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை எதிர்ப்பது... போன்ற விஷயங்களில் அக்கறை செலுத்தி வருகிறது. இந்த அமைப்பின் தலையகம் ஹாலந்து நாட்டில் உள்ளது.

இதைப் போலவே, ஐ.சி.சி. என்னும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில், அகில உலக தொழிலாளர் அமைப்பு, பன்னாட்டுக் குற்றங்களை புலனாய்வு செய்யும் இன்டர்போல், லயன்ஸ், ரோட்டரி, ரவுண்டு டேபிள்... போன்ற சேவை அமைப்புகள் அகில உலக அளவில் குறிப்பிடத்தக்க பணியாற்றுகின்றன. ●





''ஸ்கூல் வாத்தியாரா இருந்தவரை ஆபீஸ் மேனேஜராக்குனது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

''ஆபீஸுக்கு லேட்டா வர்றவங்களையெல்லாம் டேபிள் மேல ஏத்தி நிக்க வெச்சிடறாரு!''

- சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி

''இவரை போலி டாக்டர்னு எப்படிச் சொல்றே?''

''என்னோட தூரப்பார்வைக்கு பைனாகுலர் வாங்கி வச்சுக்கச் சொல்றாரே?''

- எஸ்.இஸ்வர்யா, கோபி




சிரிப்பலை

"உடல் எடையைக் குறைக்க மூணு விஷயத்தை தவிர்க்கணும்."

"அது காலை உணவு, மதிய உணவு, இரவு உணவுதானே, டாக்டர்."

- ஆர்.தங்கராஜ், திருப்பூர்





"அந்த ஸ்டாப் மட்டும் உட்காராம நின்னுட்டே வேலை செய்யறாங்க."


"அவங்தான் 'அமராவதி'யாச்சே!"


- எஸ்.ஐஸ்வர்யா, கோபி

"கரும்புக் கடையில வேலை செய்யறியே, வேலை எப்படி?"

" 'சக்கையா' பிழிஞ்சுடறாங்க!"

- பி.கோபி, கிருஷ்ணகிரி





"மொட்டை மாடிக்குப் படிக்க போனா வானத்துல அபசகுனமா ஒரு காட்சி."

"என்னது."


"பூச்சியமா, பௌர்ணமி நிலா."

- ஜே.தனலட்சுமி, கோவை

"கால் வலித்தால் இதை தடவுங்க"

"இந்த பாட்டிலை தடவினால் எப்படி டாக்டர் என் கால் வலி போகும்."

- க.இராஜசேகர், திருவண்ணாமலை





குழந்தைக் கடவுள்கள் 7

கோழிக்குஞ்சு!

கதை : ராகுல்
படம் : பிள்ளை




சிறிது தூரம் சென்றபின்...
இதென்ன? வழி தவறி விட்டேனா? பாதை முடிந்துவிட்டதே? யாரைக் கேட்பது?
அப்போது...
ஐயா என்ன தேடுகிறீர்கள்?
நிமிர்ந்து பார்க்க...
ம்... வழி தவறி வந்து விட்டேன்!
எந்த வழி? வந்த வழியா? போகும் வழியா?
என்ன கேட்டாய்?
சரி; நான் வழிகாட்டுகிறேன். எனக்கு என்ன தருவீர்கள்?
ஏழைப் புலவன் நான். உனக்குத் தர ஏதுமில்லை.
ஓ! புலவரா... அப்படியானால் என்மீது பாட்டுப் பாடும்!
உன் பெயர் என்ன?
முட்டை
விநோதமான பெயர்!


புலவர் பாடுகிறார்...
கள்ளிச்செடி எரியும் பாலையில் காலில் முள் தைக்க...
தவறு புலவரே!
அதிர்ச்சியுடன்...
என் பாட்டில் தவறா?
ஆமாம்... உமது பாட்டில்தான்!
என்ன தவறு சொல்!
பச்சையான கள்ளிச்செடி எரியும்போது, காய்ந்த முள் சாம்பலாகுமே? எப்படி காலில் தைக்கும்?
புலவர் யோசிக்க...
என்னுடைய பாட்டில் வியப்பதற்கு என்ன இருக்கிறது?
அதைவிட வியப்பு உம்முடைய பாட்டு!
ம்... கோழிக் குஞ்சை பாட மறுத்த நீர், இன்று முட்டையைப் பாடினீரே!
சிவபெருமானைப் பாடுவதைப் போல...
முருகனையும் தாங்கள் பாட வேண்டும்!
முருகா? என் பிழையை பொறுத்துக் கொள்?

அரிச்சுவடி

ஜி. பிரவீன்குமார்
திருச்சி.

'அ'து ஒரு பாழடைந்த பங்களா...

'ஆ'... என்று ஒரு அலறல் சத்தம் கேட்டது

'இ'தயம் 'லப்..டப்... லப்...டப்' என்று படபடத்தது

'ஈ'ஸி சேர் ஒன்று தானாக காற்றில் அசைந்தது.

'உ'ள்ளுணர்வு ஏதோ சொல்லியது.

'ஊ'ளையிடும் சத்தம் தூரத்தில் கேட்டது. ஓநாய்களாக இருக்குமோ?

'எ'ன்னை ஒரு அமானுஷ்ய உருவம் பின்தொடர்ந்தது. நான் பயத்தில் நடுங்கினேன்.

'ஏ'ன் என்னைப் பார்த்து பயப்படு கிறாய்? பல ஆண்டுகளுக்கு முன் நான்தான் உன்... உன்...

'ஐ'யோ என்று அலறியபடியே தடுமாறி விழுந்தேன்.

'ஒ'ரு உருவம் "கடைசி பெஞ்சல எவன்டா அவன் ஸ்கூல்லயே தூங் கறது?" என்று கத்தியது.

'ஓ'... கனவா? அதானே... நாங்க எல்லாம் நிஜத்துல சிங்கம்ல. சொல்லிக் கொண்டிருக்கும்போதே 'டஸ்டர்' பறந்து வந்தது.

'ஒள'வ்வ்வ்... என்று தலையைத் தடவியபடி பக்கத்து பெஞ்ச் நண்பனி டம் சொன்னேன்.

அ'ஃ'து கடைசிவரை என்ன சொல்ல வந்தது என்றே தெரியலடா... எப்பயா வது அந்த பங்களா பக்கம் போனா, அது என்னன்னு கேட்டுச் சொல்லு...





அவனியின் கண்கள்!



அரசன் ஒருவன் அயல்நாட்டுப்
போரில் வென்ற பொன்பொருளை
பரிசாய்த் தனது நாட்டுக்குப்
பெட்டியி லிட்டுக் கொண்டுவந்தான்!

பெட்டி அரண்மனை நெருங்கியது
பெரிதாய்ப் புகழ்மழை பொழிந்திடவே!
எட்டி நின்று அவ்வரசன்
எல்லாம் கண்டு மகிழ்ந்திருந்தான்!

அரண்மனை வாசலில் வளர்ந்திருந்த
ஆலமரத்தின் சில கிளைகள்
பெட்டியை எடுத்துச் செல்வதற்குப்
பெரிதும் தடையாய் இருந்ததுவே!

என்ன முயற்சி செய்தாலும்,
எப்படிச் சாய்த்து எடுத்தாலும்
பொன்னை நிரப்பிய அப்பெட்டி
போக மறுத்தது அரண்மனைக்குள்!

பார்த்த சில பேர் மன்னரிடம்
பணிந்து சென்று 'தடைசெய்யும்
ஆலமரத்தை யடியோடு
அகற்ற லாமா' எனக்கேட்க,

பதைத்துப் போன மன்னவனோ,
"அரண்மனைச் சுவரைப்
பெயர்த்திடுங்கள்!
அதைநீர் செய்ய மறுத்துவிட்டு
ஆல மரத்தையா சாய்ப்பீர்கள்?

சுவரைப் பெயர்த்தால் சிலமணிக்குள்
சுற்றிலும் எழுப்புதல் எளிதாகும்!
தவறாய் மரத்தைச் சாய்த்துவிட்டால்
தலைமுறைப் பாவம் நமைச்சேரும்!

மரத்தை வெட்டுதல் மாபாவம்!
மண்சுவர் எழுப்புதல் அழகெ"ன்று
உரத்த குரலில் அவன்சொல்ல,
ஓங்கி ஒலித்தது கரகோஷம்!

ஆமாம்; அன்புப் பிள்ளைகளே
அரசன் செய்ததே சரியாகும்!
அவனியின கண்கள் மரமாகும்!
அவையே மழைதரும் கரமாகும்!

நீங்கள் 'டை ஹைட்ரஜன் மோனாக் ஸைட்' பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறீர்களா?

ஆபத்தான இந்த வேதிப் பொருளைப் பற்றிப் பலருக்குத் தெரியாது. ஆனால் நம்மைச் சுற்றி வீட்டில், பள்ளியில், மற்ற இடங்களில் என எங்கு பார்த்தாலும் இந்தப் பொருள் ஏராளமாக நிறைந்து கிடக்கிறது.

'DHMO' என்று செல்லமாக அழைக் கப்படும் டை ஹைட்ரஜன் மோனாக் ஸைடில் அப்படி என்ன பெரிய ஆபத்து?

ஒன்றா, இரண்டா? ஒரு பெரிய ஆபத்துப் பட்டியலே போடவேண்டியிருக் கும். பாருங்கள் :

• டை ஹைட்ரஜன் மோனாக்ஸைடுக்கு வண்ணம் இல்லை, சுவை இல்லை, மணம் இல்லை. இது நம்முடைய உணவுப் பொருளில் கலந்திருக்கிறதா என்பதை நம்மால் கண்டுபிடிக்கவே முடியாது

• நம்முடைய உலோகப் பொருள்கள் துருப்பிடித்துக் கெட்டுப்போவதற்கு DHMO தான் முக்கியக் காரணம்

• பொருள்களுக்கு மட்டு மில்லை; மனிதர்களுக்கும் டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட் அபாயமானது. உலகமெங்கும் இதனைத் தவறுதலாக உட்கொண்டு மரணம் அடை கிறவர்கள் ஏராளம்

• டை ஹைட்ரஜன் மோனாக்ஸைடை அதிகம் சாப் பிட்டுவிட்டால், உடல் கண்டபடி வியர்க்கும்; அதிகமாகச் சிறுநீர் போகும்; வயிறு குண்டாகும், தலைசுற்றி வாந்தி, மயக்கம் வரும், நடக்கமுடியாமல் உடல் தடுமாறும்


• அதற்காக, டை ஹைட்ரஜன் மோனாக்ஸைடைத் தவிர்ப்பதும் சிரமம். ஏனெனில், இதற்கு நம் உடல் பழகி விட்டால், அதன்பிறகு இந்தப் பொருள் இல்லாமல் நம்மால் உயிர் வாழவே முடியாது.

என்ன செய்வது? எப்படித் தடுப்பது?

அது அத்தனை சுலபம் இல்லை. ஏனெனில், இன்றைய தேதிக்கு உலகெங் கும் டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட் பரவியிருக்கிறது.

உதாரணமாக, தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் சூடாகிவிட்டால் அவற்றைக் குளிர்ச்சிப்படுத்துவதற்காக சில வேதிப் பொருள்களைப் பயன்படுத்துவார்கள். இதில் டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட் கலந்திருக்கிறது.

வேதியியல்



விவசாயத்துக்குப் பயன்படுகிற நவீன பூச்சிக் கொல்லி மருந்துகளிலும் உண்டு. இதன்மூலம் நாம் சாப்பிடும் காய்கறிகள் அனைத்திலும் DHMO கணிசமான அளவில் பரவியுள்ளது.

இதேபோல், நாம் குடிக்கும் குளிர் பானங்கள், பால், மோர் ஆகியவற்றில்கூட DHMO கலந்திருப்பது கண்டறியப்பட்

டுள்ளது. நம் வீட்டில் துணி துவைக்கப் பயன்படுத்தும் சொட்டு நீலம், பாத்திரம் தேய்க்கும் கரைசல் போன்றவற்றிலும் இதன் ஆதிக்கம் அதிகம்.

இவ்வளவு ஏன்? சாக்லெட் தயாரிப்பதற்கும் டை ஹைட்ரஜன் மோனாக்ஸைடைப் பயன்படுத்துகிறார்கள்.

இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். DHMO நம் உலகத்தை ஆக்கிரமித்துவிட்டது. அதன் பிடியிலிருந்து விடுபடுவது மிகவும் சிரமம்.

முதன்முதலாக இந்த ஆபத்தைக் கண்டறிந்தவர்கள் எரிக் லெச்னர், லார்ஸ் நார்ப்சென், மேத்யூ கௌஃப்மென் என்கிற மூன்று அறிவியல் மாணவர்கள்.

கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த இவர்கள் மூவரும், மிக எதேச்சையாக அபாயத்தை உணர்ந்தார்கள்.

தண்ணீர்!



என். சொக்கன்

உடனடியாக, இந்த வேதிப் பொருளைப்பற்றியும் அதனால் வரக்கூடிய பின் விளைவுகளைப்பற்றியும் ஒரு பட்டியல் தயார் செய்தார் எரிக் லெச்னர். அவருடைய நண்பர்கள் அதனைத் துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டு, சக மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் விநியோகித்தார்கள்.

இது நடந்தது 1989ல். இப்போது வருடம் 2009. கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் கடந்துவிட்டன.

இதைத் தடை செய்யவேண்டும் என்று எத்தனையோ பேர் முயற்சி செய்திருக்கிறார்கள். பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இன்டர்நெட் என்று பல வழிகளில் இதற்கான தீவிரப் பிரசாரங்கள் நடந்துவருகின்றன.

ஆனால், பெரும்பாலான அரசாங்கங்கள் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டன.

கடைசியாக, கடந்த 2007ம் வருடம் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், டை ஹைட்ரஜன் மோனாக்ஸைடின் அபாயத்தை உணர்ந்துகொண்டார். அவர் பெயர் ஜாக்வி டீன்.

'உடனடியாக டை ஹைட்ரஜன் மோனாக்ஸைடைத் தடுத்து நிறுத்த வேண்டும். நம் நாட்டைக் காப்பாற்ற வேண்டும்' என்று துடித்த அவர், இதுபற்றி அரசாங்கத்துக்கு ஒரு கடிதம் எழுதினார்.

ஜாக்வி டீன் எழுதிய அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் நியூசிலாந்து அரசாங்கம் அதிர்ச்சி அடையவில்லை. விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஏன் தெரியுமா?

'டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட்' என்பது உண்மையில் என்ன? கொஞ்சம் யோசியுங்கள்.

'டை ஹைட்ரஜன்' என்றால் இரண்டு பங்கு ஹைட்ரஜன். 'மோனோ ஆக்ஸைட்' என்றால் ஒரு பங்கு ஆக்ஸிஜன்.

அதாவது 'டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட்' = H_2O,. சாதாரணத் தண்ணீர்!

இப்போது மேலே சொன்ன ஆபத்துப் பட்டியலை மறுபடி வாசித்துப் பாருங்கள்:

தண்ணீருக்கு நிறம், மணம், சுவை இல்லை. உலோகங்கள் துருப்பிடிக்கவும் தண்ணீர்தான் காரணம். நாம் தண்ணீரை அதிகம் உட்கொண்டுவிட்டால் உடல் பெருக்கும், வாந்தி, மயக்கம் வரும், தண்ணீர் இல்லாமல் நம்மால் வாழவும் முடியாது.

என்ன? சிரிப்பு வருகிறதா? சிரிக்காதீர்கள். இது ரொம்ப சீரியஸான விஷயம்.

'DHMO', 'டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட்' என்கிற கற்பனையான விநோதப் பெயர்களைப் பார்த்து ஏமாந்தவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள்.

இதன் அர்த்தம், நம் மக்கள் வேதியியல் போன்ற பாடங்களை உணர்ந்து படிப்பது இல்லை என்பதுதான்.

படிப்பு என்பது சும்மா மார்க் வாங்கி பாஸ் செய்வதுடன் நின்றுவிடாமல், நம் வாழ்க்கைக்கு உபயோகப்படவேண்டும். அதுதான் படிப்பின் நிஜமான மதிப்பு!

அபூர்வமான இந்த உண்மையை நமக்கு விளக்கிச் சொல்லும் ஓர் அடையாளச் சின்னம், 'டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட்' கதை!

சரி, வெயில் நேரம். ரொம்பக் களைப்பாக இருக்கிறது. ஜில்லென்று ஒரு தம்ளர் டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட் குடிக்கலாம், வாங்க! ●



விடையைச் சொல்: பரிசை வெல் - 21ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக் கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் : 1.செவ்விந்தியர்கள், 2.ராடான், 3.மில்டன் ஓபோட் 4.ஜெ.பிரான்டென் பெர்கர், 5.கிரிகோர் ஜோஹன் மெண்டல்

பரிசு பெறுவோர் :

1.கா.பரணிமணிகண்டன், கும்பகோணம்
2.வி.எஸ்.கமல், சென்னை
3.ப.சகாயதேவன், திருச்சி
4. எ.ஐ.தஸ்லீம் ஃபாத்திமா, சேலம்
5.ஜி.விக்ரம், வாலாஜா
6. க.மகேஷ், தூத்துக்குடி
7. இரா.சேதுபதி, தஞ்சாவூர்
8.ம.சரத்குமார், கோபிசெட்டிபாளையம்
9. கு.க.லாவண்யா, சேலம்
10.எஸ்.ஜெயசுதா, திருநெல்வேலி

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்!
கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

'பூவின் விருப்பம்' படக்கதை சொன்ன அறிவுரையை நானும் பின்பற்றுவேன். - **ந. பிருந்தா, மயிலாடுதுறை.** ● ஆயிரமாவது அதிர்ஷ்டசாலி உறுப்பினரான திருவண்ணாமலை கீர்த்தனா தேவியை, நாங்களும் பாராட்டி வாழ்த்துகின்றோம். - **வி.என். சௌம்யா, வேலூர்-6.** ● கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏப்ரல் 2009ல் 4 ஸ்தானத்தில்; அதாவது 1000. அதாவது 2024 ஏப்ரல் கோகுலம் இதழில் உறுப்பினர்களின் எண்ணிக்கை, ஆகா! 10,000 ஆகிவிடுமே! - **கி.சிந்து, உறுப்பினர் எண்: 786, மதுரை.** ● கிழவியின் அதிர்ஷ்டம் -சிறுகதை நகைச்சுவையாக இருந்தது. -**டி.எம். சிவரஞ்சனி, மகாதேவ குருஜி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருவாரூர் மாவட்டம்.** ● 'டாக்டர் பக்கம்' பகுதியில் வயிற்றுவலி ஏற்படக் காரணம் என்ன என்பதைத் தெளிவாக விளக்கி இருக்கிறார். - **பி.சர்வேஸ்வரன், மதுரை.** ● ஜோக் போட்டிக்கான படத்தைப் பார்த்ததும் சிரிப்புத்தான் வந்தது. சிறுகதைகள் எல்லாமே மிகவும் அருமை. - **பி.இரமணி, மதுரை.** ● சாரதிதாசனின் 'எங்கள் தோட்டம்' குழந்தைகளுக்கான பாடல். கோடையில் கொட்டும் குற்றால அருவி! -**ச.பாரதி, ச.கோகுல், வெள்ளம்பி கிராமம்.** ● உலக அதிசயங்கள் கட்டுரையும், அதிலுள்ள எகிப்து பிரமிடுகள் பற்றிய தகவல் மற்றும் புகைப்படங்கள் பார்க்க, படிக்க, அறிய சிறப்பு! - **எம்.ஹரிணி, வலங்கைமான்** ● 'சம்பவம்' பகுதி பிரபலங்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களையும், அவர்களின் சமயோசித செயல்பாட்டையும் தெரிய வைக்கிறது. - **ஆர்.மதுமதி, மதுரை** ● 'கொலுசுச் சத்தம்' படக்கதை மூலம் நெல்லை மாவட்டத்தில் நிகழ்ந்த வரலாற்றை சுவைபடத் தந்தது சிறப்பு! - **சந்தனக்குமார், வி.எம்.சத்திரம்** ● 27-ம் ஆண்டு கோகுலத்திற்கு வாழ்த்துக்கள். தலைப்புகள் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு செய்திக்கும் பக்கங்கள் ஒதுக்கப்பட்டு வித்தியாசமான பத்திரிகையாக உள்ளது. உங்கள் உழைப்பு மற்றவர்களுக்கு பயன் தரும். - **சி.வி.அனந்தராமன், சென்னை-47.** ● விடுமுறையை வீணாக்காமல் பெற்றோருக்கு உதவி, புத்தகப் படிப்பு... எனப் பயனுறுவதாய்ச் செயல்படுமாறு குட்டீஸ்க்கு கோகூ கூறியுள்ள அறிவுரை... கோடானுகோடி பெறும்! - **எஸ்.ஏ. கேசவன், கோவில்பட்டி-2.** ● ஆறு படக்கதைகளைத் தந்து, பெரியவர்களையும் குழந்தைகளையும் மகிழ்ச்சியில் மூழ்கடித்து விட்டீர்கள். - **வளர்மதி மனோதாஸ், கொட்டாரம்.** ● 'டைனோசர் உலகம்' கட்டுரையும், படங்களும் வியப்பும், திகைப்பும் அளித்தன.- **பா.விக்னேஸ்வரன் பா.தர்ஷினி, குட்டம்.**



விடையைச் சொல்; பரிசை வெல் - 23

1. ராஜாஜி பிறந்த ஊர் ....

2. காஷ்மீர் மக்கள் அணியும் நீண்ட 'கோட்'டின் பெயர் ....

3. உறக்கமின்மை நோயின் மருத்துவப் பெயர் ....

4. 'ரெட்கிராஸ் சொஸைட்டி' ஏற்பட காரணமானவர் ....

5. நியூஸிலாந்து அரசுக்கு DHMO பற்றி கடிதம் எழுதியவர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பரிசு ரூபாய் 1000/-

முடிவு தேதி : 14.5.2009



அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)


47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32


கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1026

1027


1028

1029

1030

1031

1032


1033


1034

1035

1036

1037

1038

1039

1040

1041

1042

1043


1044

1045

1046

1047

1048

1049

1050

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

